தரம் 5 – 11 வரை

எண்: 06 எழுத்து: 02

பெப்ரவரி 2012

AHARAM

அகரம்

Des: Sinan



இலங்கையின் 64வது சுதந்திர தினம்

பொதுசன நூலகம்
22 FEB 2012

வாழ்வின் வெற்றிக்கு ஆரோக்கியமான மனோநிலை

30/-

மாணவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எண்ணங்களின் வண்ணங்கள்

அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு:

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

இறுதித் திகதி 25.02.2012



www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்
எண்: 06 பெப்ரவரி 2012 எழுத்து: 02

உள்ளே...

பிரமிப்பூட்டும் கருந்துளைகள் 06

14

12

பெற்றோர், ஆசிரியர்களின் பொறுப்புகளும் கடமைகளும் 21

இலங்கையின் 64வது சுதந்திர தினம் 28

வாழ்வின் வெற்றிக்கு ஆரோக்கியமான மனோநிலை 30

பாடத்திட்டம்

விஞ்ஞானம்	34	கணிதம்	26
வரலாறு	17	தமிழ்	32-33

புலமைப் பரிசில் 40

அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பய்யா 37

8 39

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
ஏ.ஏ.எம்.பவாஸ்

சந்தா விபரம்
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமட்டகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: aharamipc@gmail.com
www.facebook.com/aharamJmf

22 FEB 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியும் வெற்றியே

மீண்டுமோர் இதழில் உங்களை அகரம் மகிழ்வோடு சந்திக்கின்றது. புதிய கல்வி ஆண்டு, சென்ற கல்வியாண்டில் பயின்ற படிப்பினைகளோடு உங்களுக்கு வெற்றிகளைத் தர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

மாணவச் செல்வங்களே! புதிய கல்வி ஆண்டில் மாற்றங்கள் காண திட்டமிட்டு விட்டீர்களா? திட்டத்தை அமுல்படுத்தத் தொடங்கி விட்டீர்களா? இனியும் தாமதம் வேண்டாம் இனிய பொழுதுகள் தொலைந்து விடும்.

பாடசாலைக் காலங்களில் மிக மகிழ்ச்சியோடு கழிக்கின்ற காலப்பகுதி முதலாம் தவணையின் ஆரம்பப் பகுதி என்பதை மாணவ சமூகம் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும். விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் சிறப்பாக பாடசாலை மட்டங்களில் நடைபெறுவதுதான் இதன் பின்னணியாகும். இவை மாணவர்கள் தமது விளையாட்டுத் திறன், ஆற்றலை வெளிக்காட்டுவதற்கான ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

உண்மையில், பாடசாலையில் இடம்பெறும் எந்தவொரு செயற்பாட்டிற் கூடாகவும் சிறந்த அடைவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அதுபோலவே விளையாட்டுப் போட்டியின் மூலம் தெளிவான அடைவுகள் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. விளையாட்டு விளையாட்டுக்காக அல்ல. மாணவர்களது உடற் திறன் விருத்தி, உள விருத்தி, சமூகத் திறன் விருத்தி என்பன விளையாட்டுப் போட்டி ஏற்பாடு செய்யப்படுவதன் மூலம் வளர்ச்சி காண வேண்டும். குறித்த மூன்று அம்சங்களும் மனித வாழ்வில் இன்றியமையாதவையாகும். ஆரோக்கியமான அறிவு ஆரோக்கியமான உடலில்தான் இருக்கும். ஆரோக்கியமான சமூக வாழ்வு ஆரோக்கியமான உள்ளங்களில்தான் தங்கி நிற்கின்றது.

"உங்களுக்கு முடியுமான சக்தி பலங்களை திரட்டிக் கொள்ளுங்கள்" (அல்குர்ஆன்) என்ற இறை செய்தி உடல், உள, சமூக ஆரோக்கியம் என இன்னும் பல அம்சங்களையும் இணைத்தே குறிப்பிடுகின்றது. இதனை உறுதி செய்யும் வகையில், "நிச்சயமாக அல்லாஹ் பலவீனமான முஃமினை விட பலமான முஃமினை விரும்புகின்றான்" என்ற நபிவாக்கு அமைந்துள்ளது.

ஒரு முஸ்லிம் மாணவன் இத்தகைய பின்னணியோடுதான் விளையாட்டைப் பார்க்க வேண்டும். வெற்றி பெறுவதற்கும் கட்டுப்படுவதற்கும் பயிற்சி பெற சிறந்த சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வெற்றியையும் தோல்வியையும் சரிநிகர் சமமாக நோக்க வேண்டும். தோற்பதற்கு கற்றுக் கொள்ளும் வாய்ப்பு இது. தோல்வி, பாடங்கள் பெறவேயன்றி விரக்தியடைந்து வாழ்வின் சுவையைத் தொலைப்பதற்கல்ல.

மாணவர்கள் இல்லங்களாகப் பிரிக்கப்பட்டே பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும். கூட்டுச் சேர்ந்து செயற்படுவதற்கான (Team Work) பயிற்சியை மாணவர்களுக்கு வழங்குவதுதான் இதன் நோக்கமாகும். கூட்டாகச் செயற்படுவதென்பது அதற்கான உளப்பாங்கைப் பெறாதபோது இலகுவான கருமமல்ல. சமூக வாழ்வு என்பது கூட்டு வாழ்வு. அதில் பல்வேறு வகையான, வித்தியாசமாக சிந்திக்கின்ற மனிதர்களை நாம் எதிர்கொள்ள நேரிடும். அவர்களோடு சேர்ந்து செயற்பட வேண்டியேற்படும். அத்தகைய சமுதாய வாழ்வை எதிர்கொள்ளும் நேர்வகை ஆளுமைகளை உருவாக்கி எடுப்பதுதான் இல்ல விளையாட்டுப் போட்டியின் நோக்கமாகும்.

எழ வேண்டும்; விழும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் எழ வேண்டும். அப்போது தோல்வியும் வெற்றியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது அன்பு மனைவி ஹவ்வா (அலைஹாஸ்ஸலாம்) இரண்டு இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றார்கள். காபிலும் அவரது சகோதரியும் ஹாபிலும் அவரது சகோதரியுமே அவ்விரு இரட்டைக் குழந்தைகள்.

உலக வரலாற்றில் முதல் கொலை

குழந்தைகள் பெற்றோரின் பராமரிப்பில் வளர்கிறார்கள். இளமைப் பருவத்தை அடைந்த இருவரும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டனர். காபில் விவசாயத்திலும் ஹாபில் கால்நடை வளர்ப்பிலும் தமது ஈடுபாட்டைச் செலுத்தினர். இருவரும் சந்தோஷமாகவும் பாதுகாப்பாகவும் தம் குடும்பத்தார்களுடன் வாழ்ந்து வந்தனர். இருவரும் பருவ வயதை அடைந்தபோது மனநிறைவோடும் அன்புப் பிணைப்போடும் வாழ மணமுடிக்க விரும்பினர்.

தந்தை ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கமைவாக தத்தமது துணைவியர் யார் என்பதை தனது மகன்மாருக்கு கூறினார்கள். இம்முடிவை காபில் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். காரணம் சகோதரனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் அழகானவள். தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் அழகில் குறைந்தவள். தனக்கு அழகான பெண்ணே மனைவியாக வர வேண்டும் என்பதுதான் காபிலின் பிடிவாதமாக இருந்தது.

நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு தீர்ப்பை வழங்கினார்கள். "இருவரும் அல்லாஹ்வை நெருங்குவதற்காக தத்தமது குர்பானை வழங்க வேண்டும். எவருடைய குர்பானை அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றானோ அவர் தான் விரும்பும் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முடியும்" என்பதுதான் நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது தீர்ப்பாக அமைந்தது. இருவரும் தமது குர்பான்களை வழங்கினர். ஹாபில் உளத் தூய்மையோடு தந்தைக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டதால் அல்லாஹ் ஹாபிலின் குர்பானை ஏற்றுக் கொண்டான். காபில் உளத்தூய்மையின்றி குர்பானை நிறைவேற்றியதால். காபிலின் குர்பானை நிராகரித்து விட்டான்.

தனது எதிர்பார்ப்பு நிறைவேறாது என்பதை உணர்ந்த காபில் தன் சகோதரன் மீது குரோதமும் பொறாமையும் கொண்டான். ஆனால், ஹாபில் தன் சகோதரனை மனப்பூர்வமாக நேசித்தார். ஹாபில் இறையச்சம் நிறைந்தவராகவும் அறிவும் உடல் வலிமையும் கொண்டவராகவும் காணப்பட்டார். தனது பொறுப்பை உணர்ந்து தனது சகோதரனின் மனோநிலையை மாற்ற உபதேசம் செய்தார்.

காபிலின் அறியாமையும் குரோதமும் பொறாமையும் பெரும் பாவமொன்றைச் செய்வதற்கு அவரைத் தூண்டியது. அவர் தன் சகோதரன் ஹாபிலை அநியாயமாகக் கொலை செய்தார். பூமியில் நிகழ்ந்த முதலாவது கொலை ஹாபிலின் கொலையாகும். காபில் உலகில் நிகழும் அனைத்துக் கொலைகளின் பாவச் சுமையில் பங்கு பெற்றுக் கொண்டே இருக்கின்றார்.

தனது சகோதரனின் உடலை எவ்வாறு அடக்கம் செய்வது என காபில் குழம்பித் தடுமாறிக் கொண்டிருந்தபோது இரண்டு காகங்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவை இரண்டும் மற்றொன்றைக் கொல்லும் வரை சண்டையிட்டன. அதில் ஒன்று இறந்தபோது மற்றைய காகம் மண்ணில் குழி தோண்டி அதனுள் இறந்த காகத்தைப் புதைத்தது.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற் சுகாதாரம் பேணுவோம்

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: السِّوَاكُ مَطْهَرَةٌ لِلْفَمِ مَرْضَاةٌ لِلرَّبِّ (رَوَاهُ النَّسَائِيُّ)

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **"பல் துலக்குவது வாய்க்கு சுத்தத்தை ஏற்படுத்தக்கூடியதும் இறைவனிடத்தில் பொருத்தத்தைப் பெற்றுத்தரக் கூடியதுமாகும்."** (நஸாஈ)

மனித உடல் எப்போதும் ஆரோக்கியமிக்கதாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் இஸ்லாம் சுத்தத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. **"சுத்தம் ஈமானின் ஒரு பகுதி"** எனவும் அதனை உயர்வுபடுத்திப் பேசுகிறது. அல்லாஹ் ஸூரதுல் பகராவில் பின்வருமாறு எடுத்துரைக்கிறான்.

"நிச்சயமாக அல்லாஹ் சுத்தமாக இருப்பவர்களையே நேசிக்கிறான்."

யார் சுத்தமாக இருக்கின்றாரோ அவருடைய உடலும் உள்ளமும் இயல்பாக ஆரோக்கிய நிலைக்குட்பட்டு அவர் அன்றாட செயற்பாடுகளில் உற்சாகத்துடனும் வினைத்திறனுடனும் செயற்படுவார். இதற்கு மாற்றமாக சுத்தம் தொடர்பாக எந்த சிந்தனையும் இல்லாமல் இருப்பவர்களை மக்கள் கூட புறக்கணிப்பார்கள் என்பது தெளிவு.

மனிதனை சுத்தமாக வைத்துப் பாதுகாக்க வேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகவும் முக்கியத்துவமானதுதான் பற்களை சுத்தமாக வைத்திருப்பதாகும். இது எமது வாய் எப்போதும் தூய்மையானதாக இருப்பதற்கு வழியேற்படுவதுடன் இறைவனின் அன்பையும் பெற்றுத்தரக் கூடியது என்பதை மேலுள்ள ஹதீஸ் மற்றும் அல்குர்ஆன் வசனத்தின் மூலம் அறியலாம்.

பல் துலக்குவதன் முக்கியத்துவம் தொடர்பாக ஒரு தடவை நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

"என்னுடைய சமுதாயத்தினருக்கு சிரமம் தரக்கூடும் என்று நான் கருதவில்லையென்றிருந்தால் ஒவ்வொரு வுழூவிலும் பல் துலக்குமாறு கட்டளையிட்டிருப்பேன்."

(அல்புகாரி)

நபியவர்கள் பற்களை துலக்கி எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்திருக்கிறார்கள் என்பதை இந்த ஹதீஸூம் எமக்கு எடுத்துரைக்கிறது. பற்களை துலக்கி சுத்தமாக வைத்திருப்பதன் விளைவாக அல்லாஹ் மாத்திரமல்லாது பிற மனிதர்களும் எம்முடன் நல்ல முறையில் பழகி எம்மைப் பற்றிய நல்லபிப்பிராயத்தை மனதில் ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

நபிகளாரின் இந்த சுன்னாவை பலர் பொடுபோக்கின் காரணமாக விட்டுவிடுகிறார்கள். இன்னும் சிலர் ஒரு நாளைக்கு ஒரு தடவை பல் துலக்கினால் போதும் என்ற மனோநிலையில் காலையில் மாத்திரம் பல் துலக்கும் பழக்கமுடையோராக இருக்கின்றனர். இதனால் வாயில் துர்வாடை வீசும் நிலையில் தொழுகைக்குச் செல்கின்றார்கள். இந்தத் துர்வாடை மற்ற சகோதரர்களுடைய தொழுகையையும் பாழாக்கி விடுகிறது.

ஒரு தடவை நபியவர்களிடத்தில் ஒரு கூட்டத்தினர் வந்தனர். அவர்களுடைய பற்கள் மஞ்சள் நிறமுடையதாகக் காணப்பட்டன. இதனை அவதானித்த நபியவர்கள் அவர்களை பல் துலக்குமாறு கட்டளையிட்டார்கள்.

ஆகையால் நாமும் அன்றாட வாழ்வில் உணவு உட்கொண்ட பின்னர், தொழுகைக்குச் செல்லும் சந்தர்ப்பங்கள், இரவுத் தூக்கத்திற்குச் செல்லும் முன் பற்களைத் துலக்கி சுத்தமாக வைத்திருப்போம். இது எமது உடலுக்கு ஆரோக்கித்தை ஏற்படுத்துவதுடன் நபியவர்கள் சுன்னாவைப் பின்பற்றிய நன்மையையும் பெற்றுத் தரும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுச் செயற்பாட்டிற்கு தயாராதல்

மதீனா வந்து உற்சாகமாக தமது செயற்பாடுகளை ஆரம்பித்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குழுச் செயற்பாடு (Team Work), சேர்ந்து பணியாற்றும் பண்பினை வளர்த்தல், பிறருக்கு ஒத்துழைத்து செயற்படல் போன்ற நற்பண்புகளையும் ஆரோக்கியமான நிலைமைகளையும் உருவாக்குவதற்கு ஸஹாபிகளுக்குப் பயிற்சியளித்தார்கள். இதன் மூலம் மதீனாவிலிருந்த அன்ஸாரிகள், மக்காவிலிருந்து வந்திருந்த முஹாஜிர்கள் ஆகியோருக்கிடையில் உள்ளார்ந்த இணைப்பை ஏற்படுத்தினார்கள்.

குழுவாக இணைந்து செயற்படுவதற்கு முன்னால் அவ்வாறு செயற்படுவதற்கான அடிப்படைகளை ஏற்படுத்தினார்கள். இந்த அடிப்படையிலேயே நபியவர்கள் முஹாஜிர்களையும் அன்சாரிகளையும் ஒருவரோடொருவர் பிணைத்துவிட்டார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களையும் ஸஅது இப்னு ரபீஆ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களையும் நபியவர்கள் சகோதரர்களாக ஆக்கினார்கள். அப்போது அப்துர் ரஹ்மானிடம் ஸஅது இப்னு ரபீஆ கூறினார்:

"அன்ஸாரிகளில் நான் வசதி வாய்ப்புள்ள செல்வந்தன். என் செல்வங்களை இரண்டு பங்குகளாக்கி உங்களுக்கு ஒரு பங்கை வழங்கி விடுகிறேன். எனக்கு இரண்டு மனைவியர் இருக்கின்றனர். இருவரில் யாரைப் பிடிக்குமோ அப்பெண்ணை நான் தலாக்கூறி விடுகிறேன். அவர் இத்தா காலத்தை முடித்துவிட்டால் நீங்கள் அப்பெண்ணை மணமுடித்துக் கொள்ளுங்கள்."

அப்துர் ரஹ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ் உங்களுக்கு நலமும் வளமும் வழங்குவானாக! அவ்வாறே உங்கள் குடும்பத்தினருக்கும் நல்குவானாக! எனக்கு உங்களது கடைத் தெரு எங்கே இருக்கின்றதென்று காட்டுங்கள். அது போதும்."

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி ஒத்தாசை புரிவதே வெற்றிபெறுவதற்கான வழியாகும். மற்றவர்களை உங்கள் சகோதரர்களாக பார்க்கும் போதுதான் பிறருடன் இணைந்து பணியாற்றும் மனோநிலை வளரும்.

நபியவர்கள் ஸஹாபிகளுக்கு மத்தியில் இவ்வாறானதோர் ஆரோக்கியமான உறவைக் கட்டியெழுப்பினார்கள். நாமும் பிறருடன் ஒத்துழைத்து இணைந்து செயற்படும் பண்பினை வளர்த்துக் கொள்வோம். குழுச் செயற்பாடுகளில் பங்கெடுப்போம். எவ்வாறான விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்போடு நடந்து கொள்ள வேண்டும் என குர்ஆன் எமக்கு வழிகாட்டுகின்றது.

"நன்மையான விடயங்களிலும் இறைபக்தி (தக்வா) உடன் நடக்கக்கூடிய விடயங்களிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி புரியுங்கள். பாவமான விடயங்களிலும் பகைமை பாராட்டுவதிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி புரிய வேண்டாம்."

(அல்மாஇதா:2)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"முஃமின்கள் அனைவரும் ஓர் உடலைப் போன்றவர்கள். அவனது கண்ணுக்கு வலி ஏற்பட்டால் அவனது உறுப்புகள் அனைத்தும் வருந்துகின்றன. அவனுக்குத் தலைவலி ஏற்பட்டால் அனைத்து உறுப்புகளும் அதனால் வேதனை அடைகின்றன." (முஸ்லிம்)

எனவே, நாம் இன்றிலிருந்து பிறரோடு இணைந்து குழுவாக செயற்படப் பழகுவோம். அப்போதுதான் எமது செயற்பாடுகளின் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும்.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் அற்புதப் படைப்பு- தொடர் 43



ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk



பிரமிப்பூட்டும் கருந்துளைகள்

1971ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் Cygnus என்ற உடுத்தொகுதியில் கருந்துளையொன்று இருப்பதாக வானியலாளர்கள் கண்டுபிடித்தனர். அண்டவெளியில் உள்ள வெள்ளுடுத் தொகுதிகளின் (Galaxies) மத்தியில் இவை இருக்கின்றன. எமது ஞாயிற்றுத் தொகுதி அமைந்துள்ள பால்வீதி (Milky way) எனும் வெள்ளுடுத் தொகுதியின் மத்தியில் சூரியனை விடவும் 2.6 மில்லியன் மடங்கு திணிவுடைய கருந்துளை ஒன்று இருப்பதாக நம்பப்படுகின்றது.

2007ஆம் வெளியான The Nature சஞ்சிகையில் நாஸா விஞ்ஞானிகள் புதிய பிரமாண்டமானதொரு கருந்துளையைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்திருந்தனர். இது சூரியனைப் போல 15.65 மடங்கு விசாலமானது. இந்த கருந்துளைக்கு அண்மையில் சூரியனைப் போன்று 70 மடங்கு பெரிய நட்சத்திரம் ஒன்றும் உண்டு. இது சுற்றும் போது வெளியாகும் x கதிர்களை வைத்தே இது கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 2008 மார்ச் 18ல் இதுவரை கண்டறியப்பட்ட கருந்துளைகளையும் விடப் பிரம்மாண்டமானதொரு கருந்துளையை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். அதற்கு Galaxy Classic எனப் பெயரிட்டுள்ளனர். நமது சூரியனின் விட்டம் 1,390,000 மைல்களாகும். இதனையும் விட 1800 கோடி மடங்கு மிகப் பெரியதுதான் இந்த Galaxy Classic எனும் கருந்துளை. பூமியில் இருந்து 3.5 பில்லியன் (350கோடி) ஒளி ஆண்டு தொலைவில் இக்கருந்துளை காணப்படுகின்றது.

சூரியனும் கருந்துளையாக மாறும்

மறுமைநாள் உருவாக ஆரம்பிக்கும்போது அதன் ஒரு கட்டமாகப் பிரபஞ்சத்திலுள்ள நட்சத்திரங்கள் அனைத்தும் கருந்துளைகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறும் என அல்குர்ஆன் கூறுகின்றது. எமது பூமிக்கு அண்மையில் இருக்கும் ஒரு நட்சத்திரமான சூரியனும் அவ்வாறே கருந்துளையாக மாறும் என்பதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

"சூரியன் (ஒளி நீக்கப்பட்டு) சுருட்டப்படும் போது, நட்சத்திரங்களும் (ஒளியிழந்து) உதிர்ந்து விடும்போது..." (81: 1,2)

கருந்துளைகள் பிரதானமாக இரண்டு வேலைகளைச் செய்கின்றன. ஒன்று அவை தமது உட்பகுதியை நோக்கி சுருங்கிக் கொண்டே இருக்கும். கருந்துளை தனது மையப் பகுதியை நோக்கி சுருளும் என்ற உண்மையையே மேற்கூறிய திருமறை வசனமும் கூறுகின்றது. கருந்துளையின் மற்றைய தொழில் வெளியே உள்ள பிற பொருட்களைத் தன்னுள் ஈர்த்துக் கொள்வதாகும்.

சந்திரன், சூரியன் மற்றும் பூமியின் ஆயுட் காலம் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்ட விண்வெளி ஆய்வாளர்கள், ஒரு கட்டத்தில் சூரியன் பிரகாசமிழந்து விடும் என்றும் சந்திரன் சூரியனோடு இணைந்துவிடும் என்றும் கூறுகின்றனர். சூரியனின் எரிபொருளான ஹைட்ரஜன் வாயுக்கள் தீர்ந்ததும் அதன் முடிவும் ஆரம்பமாகி விடும். அப்போது சூரியனின் ஈர்ப்பு விசையில் மிகப் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து அதனால் சூரியனைச் சுற்றி வருகின்ற சந்திரன், எமது பூமி உட்பட கோள்கள், உப கோள்கள், எண்ணற்ற விண்கற்கள் அனைத்தையும் சூரியன் தன்னுள் ஈர்த்துக் கொள்ளும்.

தற்போது சூரியனின் சில இடங்களில் கறுப்புப் புள்ளிகள் (Black Spots) தோன்றியிருப்பதாகவும் அவ்விடங்களில் ஏனைய இடங்களை விடவும் வெப்பம் குறைந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அவ்விடங்களில் உள்ள ஹைட்ரஜன் எரிபொருள் தீர்ந்து போயுள்ளமையே அதற்குக் காரணம் என்பதையும் அறிவித் துள்ளனர்.

சூரியன் கருந்துளையாகி அது விண்பொருட்களைத் தன்னோடு இணைத்துக் கொள்ளும் என்ற கருத்தை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

"சந்திரனும் ஒளியிழந்துவிடுமானால், சூரியனும் சந்திரனும் ஒன்றாக்கப்பட்டுவிடும்." (75: 8,9)

சூரியன் கருந்துளையானால் அதனிடமிருந்து ஒளியைப் பெற்றுப் பிரதிபலிக்கும் சந்திரனின்



ஒளி தானாகவே மறைந்துவிடும், பின்னர் சந்திரனை சூரியன் இழுத்துக் கொள்ளும். வருடத்திற்கு 3cm அளவு தூரம் பூமியை விட்டும் சந்திரன் விலகிச் செல்வதாக கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ந்தும் சந்திரன் விலகிச் செல்ல சூரியனும் கருந்துளையாக மாறிவிட இரண்டும் ஒன்றிணைவது இன்னும் இலகுவாகிவிடும். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

ஆரம்ப கால இஸ்லாமிய விஞ்ஞானிகள் அல்குர்ஆனின் நிழலில் இருந்து பிரபஞ்சத்தை ஆராய்ந்தார்கள். ஆனால், இன்று நாம் யாரோ கண்டுபிடித்துக் கூறிய விஞ்ஞானக் கருத்துக்கள் அல்குர்ஆனில் உள்ளனவா என்று தேடிப் பார்க்கிறோம். சுயமாக ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு இன்று அநேக முஸ்லிம்களிடம் ஆர்வமும் ஆசையும் இருந்தாலும்கூட அதற்கான வளங்கள் இல்லாதிருப்பது இதுபோன்ற செயல்களுக்கு வழி வகுக்கிறது.

இதிலிருந்து சிலர் விஞ்ஞானத்தை வைத்து அல்குர்ஆனை ஈமான் கொள்ளும் நிலைமையும் உருவாகியுள்ளது. உண்மையில் இது மிகப் பிழையானது. ஏனெனில் விஞ்ஞானம் என்பது மனிதனது சாதாரண அறிவாராய்ச்சிக்கு உட்பட்டதாகும். இன்று ஒரு கருத்தைக் கூறும் விஞ்ஞானிகள் நாளை அதற்கு மாற்றமான ஒரு கருத்தைக் கூறக்கூடும். இதனால் அவர்களைக் குறை கூறவும் முடியாது. ஏனெனில், தமது சக்திக்குட்பட்ட ஆய்வு முடிவுகளாக அவை இருப்பதாகும். அல்குர்ஆன் என்றும் எப்போதும் சத்தியத்தையே எடுத்துக்கூறும் உண்மை வேதமாகும்.

"அலிப்லாம்மீம். (இதோ) இதுதான் வேதமாகும். இதில் மயக்கங்களுக்கு இடமில்லை. இறையச்சமுள்ளோருக்கு இது நேர்வழியாக இருக்கும்." (2: 1,2)

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை மரம்



பனை நீண்டு உயர்ந்து வளரும். ஆண் பனை, பெண் பனை என்று பனையில் இருவகை உண்டு. பனை மரம் கறுப்பு நிறத்துடன் தடித்து நெட்டை யாக இருக்கும். இதற்குக் கிளை எதுவும் இல்லை. இதன் உச்சி யில்தான் ஓலைகள் வளரும்.

பனையின் ஒவ்வொரு பாக மும் பயன்பாடு மிக்கது. பனை ஓலை பாய், பெட்டி, கடகம், கூடை இழைக்க உதவுகின்றது. வீடு வேய, வேலி அடைக்கவும் பயன்படுகின்றது. பனை ஓலை யிலிருந்து அழகிய விசிறிகள் செய்யலாம். பனங்காயிலிருந்து நுங்கு பெறுவர். நுங்குகள் உண் பதற்கு சுவையாக இருக்கும்.

பனையிலிருந்து பனம் பழம் கிடைக்கின்றது. பனம் பழத்தின் சாற்றைப் பிழிந்து பனாட்டு, ஜாம் போன்றவை செய்வர். பனையிலிருந்து பெறப்படும் பனநீர் சுவையானது. பனம் விதை களை பாத்தி போட்டு கிழங்கு பெறுகின்றனர். பனங்கிழங்கை இரண்டாகப் பிளந்து காய விட்டு ஒடியல் செய்வர். ஒடி யலை இடித்து எடுக்கப்படும் மா ஒடியல் மா எனப்படும். ஒடி யல் மாவில் பிட்டு, கூழ் போன் றவை செய்யலாம். நமக்குத் தேவை யான பொருட்களை கொடுப்ப தால் பனையை 'பூலோக கற்பக தரு' என்று அழைக்கின்றனர்.

ஏ.ஆர்.எப். இஸ்கா, மடிகே மிதியால

பேப்பர் கிளிப்பைக் கண்டுபிடித்தவர்கள் யார் தெரியுமா?



நாம் தினசரி பயன்படுத்தும் பேப்பர் கிளிப்பை 3 பேர் கண்டுபி டித்தனர். 1899ம் ஆண்டு வில்லியம் மிடில்புறூக் என்பவரும் 1900ம் ஆண்டு பிராஸ்னன் என்பவரும் 1901ம் ஆண்டு ஜோகன் வாலெர் என்பரும் கண்டுபி டித்தனர். இந்த மூவருமே தங்களது தயாரிப்பிற்கு காப்புரிமை பெற்றனர்.

இதனால் பேப்பர் கிளிப்பை யார் கண்டுபிடித்தது என்ற மிகப் பெரிய கேள்வி எழுந்தது. ஆனால் மூன்றாவ தாக கண்டுபிடித்த ஜோகன் வாலெ ருக்குத்தான் பேப்பர் கிளிப்பைக் கண்டுபிடித்தவர் என்று அங்கீகாரம் தரப்பட்டது.

காரணம் 1899ம் ஆண்டே ஜோகன் வாலெர் பேப்பர் கிளிப்பைக் கண்டுபி டித்து விட்டார். ஆனால் அவர் பிறந்த நாடான நோர்வேயில் அப்போது காப் புரிமைச் சட்டம் கிடையாது. இதனால் அவர் ஜேர்மனி மற்றும் அமெரிக்கா வில் தனது கண்டுபிடிப்பிற்கு காப்பு ரிமை கோரினார். தவிர மற்ற இருவ ரையும் விட வயதில் ஜோகன் இளை யவராக இருந்தார். இதனால் ஜோகன் வாவெரே பேப்பர் கிளிப்பின் கண்டு பிடிப்பாளராக அங்கீகரிக்கப்பட்டார்.

ஏ.டபிள்யூ.எப். முபீஸா
இறக்காமம்

தொழிற்சாலைகளின் அமைவிடம்

கட்டிப்பால்	பொலன்னறுவை
உருக்கு	ஹேறுவெல
உப்பளம்	புத்தளம், அம்பாந்தோட்டை
பீங்கான், மட்பாண்டம்	பிலியந்தல
டயர், டியூப்	களனி
சீமெந்து	புத்தளம், காலி
காகிதம்	வாழைச்சேனை
சீனி	கந்தளாய், பெலவத்த
கனிப்பொருள்	புல்மோட்டை
இறப்பர்	மாவனல்லை
உலோகம்	யக்கல
கோதுமை மா	திருகோணமலை

நிலாம் றஸியா, ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரமான...

மேட்டு நிலம்	-	ஹற்றன்
குன்று	-	கொக்காகல
அணைக்கட்டு	-	விக்டோரியா
மலை	-	பேதுருதாலகால

நீளமான...

ஆறு	-	மகாவலி கங்கை
பாலம்	-	வேலணை - புங்குடுதீவு
மாகாணம்	-	வடக்கு
பெருந்தெரு	-	இரத்தினபுரி, மட்டக்களப்பு

குறைந்த...

நிலப்பரப்பு கொண்ட மாவட்டம்	-	கொழும்பு
மழைவீழ்ச்சி பெறும் இடம்	-	மறிச்சுக்கட்டி
வெப்பநிலை பெறும் இடம்	-	நுவரெலியா
சனத்தொகை அடர்த்தி கொண்ட மாவட்டம்	-	முல்லைத்தீவு

பெரிய...

தாவரவியல் பூங்கா	-	பேராதனை
நீர்வீழ்ச்சி	-	பம்பர கந்தை
காடு	-	சிங்கராஜ வனம்
தீவு	-	தலைமன்னார்
சமவெளி	-	ஹட்டன்
மாகாணம்	-	வடமத்திய மாகாணம்

ம்.ஃறூப் மபாஸா, ஓட்டமாவடி

பாம்பைப் பற்றி



- ஊன் உண்ணிகளான பாம்புகள் நகருயிர்கள் எனும் விலங்குக் கூட்டத்தை சேர்ந்தவை.
- இப்பாம்புகளின் தோலின் மேல் செதில்களைக் கொண்ட செதிலுறை காணப்படும்.
- இது உடலிலிருந்து நீர் வெளியேறுவதைத் தடுக்கும். சில மாதங்களுக்கு ஒரு தடவை செதிலுறை கழற்றப்பட்டு புதிய செதிலுறை தோற்றுவிக்கப்படும்.
- வயிற்றுப் புறமாக உள்ள செதில்கள் பாம்புகளின் இடப்பெயர்ச்சிக்கு உதவும்.
- பாம்புகள் தம்மிலும் பலமடங்கு பெரிய இரையையும் உணவாகக் கொள்ளும் ஆற்றலுடையவை.
- அதன் வாயின் மேற்றாடை, கீழ்த் தாடை என்பன மேல் கீழாக நன்றாக விரிவடையக் கூடியன. மேலும் கீழ்த் தாடை மத்தியில் இருந்து பக்கமாக விரியக்கூடிய இரு பக்கங்களையும் கொண்டது.
- தாடைகளுடன் இணைந்துள்ள தசைகள் தாடைகளை விரிப்பதற்கும் விசையுடன் இரைகளைப் பற்றுவதற்கும் உதவுகிறது.
- உமிழ் நீர் சுரப்பிகள் நச்சுச் சுரப்பிகளாக மாறியுள்ளன.
- விஷமுள்ள பாம்புகளில் மட்டும் நச்சுச் சுரப்பிகள் காணப்படும்.
- இப்பாம்புகள் கூரிய வளைந்த நச்சுப் பற்களைக் கொண்டவை.

ஏ.எப். அசானா
மருதமுனை

சில தகவல்கள்

1. பின் புறமாக பறக்கும் பறவை - ஹம்மிங் பேர்ட்
2. இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ் பத்திரிகை - உதய தாரகை
4. இமையில்லாத விலங்கு - பாம்பு
5. மனித உடலில் மிகப் பெரிய உறுப்பு - கல் ஈரல்
6. மனித உடலில் மிகப் பெரிய அங்கம் - தோல்
7. இரும்புச் சத்து குறைவடைவதனால் ஏற்படும் நோய் - குருதிச் சோகை
8. மனித உடலில் குருதி பாயாத பகுதி - கண்ணின் கருமணி
9. மனித உடலில் இரத்தம் உருவாகும் இடம் - ஈரல்

ஏ.எப். அசானா
மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கு சில

◎ சந்திரனுக்கு விண்வெளிக் கலம் ஏவிய முதல் நாடு எது?	ரஷ்யா
◎ தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு?	சீனா
◎ ஜீவன கங்கை எனப்படுவது எது?	மகாவலி கங்கை
◎ உயரமான எரிமலை எது?	கொடபாக்ஸி
◎ ஞான ரதம் என்ற நூலை எழுதியவர் யார்?	பாரதியார்
◎ அமெரிக்காவின் முதல் வானிலை ஆய்வு கோள் எது?	டைரோஸ்
◎ 'இரும்புச் சீமாட்டி' என அழைக்கப்படுவர் யார்?	கொண்டலிசா ரைஸ்
◎ இந்தியாவின் மிகப் பெரிய காவியம் எது?	மகாபாரதம்
◎ 'இங்கிலாந்தின் தோட்டம்' என அழைக்கப்படுவது?	கென்ட்

ஹப்ஸா அத்தாஸ்
தேத்தீலியங்க

ஐ.நா பொதுச் செயலாளர்கள்

1946 - 1952	டிரைவ் லை	(Trygce Lie)	நோர்வே
1953 - 1961	டேக் ஹேமர்	(Dag Hammar)	சுவீடன்
1961 - 1971	யூ தான்ட்	(U Thant)	மியன்மார்
1972 - 1981	கேர்ட் வோல்ட் ஹெய்ம்	(Kurt Wald heim)	ஆஸ்திரியா
1982 - 1991	ஜேவியர் பெரல்டி கியூலர்	(Javier Perez de Cuellar)	பெரு
1992 - 1996	பூட்ரோஸ் காலி	(Boutros Ghali)	எகிப்து
1997 - 2006	கொபி அனான்	(Kofi Annan)	கானா
2007 - இதுவரை	பான்கீ மூன்	(Ban ki-moon)	தென்கொரியா

முஹம்மத் பஷீர், சிராஜ் நகர், தம்பலகாமம்

கண்டுபிடிப்புகள்

எம்.எம்.எம். சப்ரி, ஹந்தஸ்ஸ

தொலைக்காட்சியைக் கண்டு பிடித்தவர்- ஜோன்பயர்ட்	John Baird
தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்- கிரகம்பல்	*Graham Bell*
தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்- சிங்கர்	*Singer*
பரிணாமக் கொள்கையை வெளியிட்டவர்- சார்ல்ஸ் டார்வின்	*Charles Darwin*
தட்டச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்- கிறிஸ்டோபர்	Christopher
பரசூட்டைக் கண்டுபிடித்தவர்- கனேரின்	Garnerin
நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்தவர்- பஷ்நெல்	Bushnell
விமானத்தைக் கண்டுபிடித்தவர்- ரைட் சகோதரர்கள்	Wright brothers

கல்வியைப் பற்றி அறிஞர்கள்

1. கல்வி இல்லாத ஆன்மா பணி செய்யாத சலவைக் கல். -எடிசன்
2. கல்வியின் இலட்சியம் மதிப்பெண் அல்ல. மாறாக, அறிவு நலம் பெறுவதே. -அறிஞர் அண்ணா
3. வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறமை கல்வியாலேயே ஏற்படும். -ரொபின்

எஸ்.எம். பயாஸ், நாச்சியாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் துணுக்குகள்

- அடிக்கடி தோன்றி மறையும் வால் நட்சத்திரங்கள் சிறிய நீள் வட்டத்தில் சுற்று பவையாகும்.
- என்க்கே (Encke) என்ற வால் நட்சத்திரம் ஏறத்தாழ 3 வருடங்களுக்கு ஒரு தடவை தோன்றுகின்றது.
- வால் நட்சத்திரங்களில் புகழ் பெற்ற ஹாலி என்பது 75 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும்.
- சூரிய குடும்பக் கோளின் அடைக்குள்ளே அமைந்திருக்கும் வால் நட்சத்திரங்கள் 150 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும்.
- சிகனாப் எனும் விண்மீன் மண்டலம் ஏறத்தாழ 500 கோடி சூரியன்களின் கதிர்வீச்சு அளவுத் திறனை வெளிப்படுத்துகிறது.
- மனிதனின் மூக்கு 10 வகையான மணங்களை வேறுபடுத்தி அறியும் தன்மை கொண்டது.
- மனிதனின் மூளை தன் ஆயுள் காலத்தில் 10 கோடி செய்திகளை சேமித்து வைக்கும் திறன் கொண்டது.
- நீர் என்பது ஹைட்ரஜனும் ஒட்சிசனும் இணைந்து உண்டான மூலக் கூறுகளாலான திரவமாகும்.
- சந்திரன் தோன்றி ஏறத்தாழ 460 கோடி ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஐ.எப். இஷ்ரா



(Encke) வால் நட்சத்திரம்

விடை தெரியுமா?

- அதிக மொழிகள் பேசப்படும் நாடு- இந்தியா
- உலகில் தனவந்த விளையாட்டு, விளையாட்டு வீரர்- கோல்ப், டைகர் வூட்ஸ்
- உலகில் மிகப் பெரிய நூலகம்- இரண்டு கோடி நூல்கள் உள்ள லெனின் நூலகம்
- 'கிழக்கு பிரிட்டன்' என அழைக்கப்படும் நாடு- **ஜப்பான்**
- இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற இங்கிலாந்து பிரதமர்- **வின்ஸ்டன் சேர்ச்சில்**

ஷப்னா ஹுசைன்
வெலம்பொட

முதலாவது சாதனைப் பெண்கள்

துறை	பெயர்	நாடு	ஆண்டு
மருத்துவம்	எலிசபெத் பிளெக்வெல்	அமெரிக்கா	1849
பல்வைத்தியர்	லூஸி ஹொப்ஸ் டெய்லர்	அமெரிக்கா	1866
வழக்கறிஞர்	அரபெல்லா மேன்ஸ்ஃபீல்ட்	அமெரிக்கா	1869
நீதிபதி	எஸ்தர் மோரிஸ்	அமெரிக்கா	1876
விமானி	எமலி ஏர்ஹாட்	அமெரிக்கா	1909
பொலிஸ்	எலிஸ் ஸ்டெப்பின்ஸ் வெல்ஸ்	அமெரிக்கா	1910
ஜனாதிபதி	இஸபெல் பெரோன்	ஆர்ஜென்டீனா	1974
புகையிரத ஓட்டுனர்	அன்னே விண்டர்	ஐக்கிய இராச்சியம்	1983
பிரதமர்	ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா	இலங்கை	1960

எம்.எச். சதக்கத், பொத்துவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

اللغة العربية

அன்றாட வாழ்வில்

அரபு மொழி

தொடர் 29

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

உருபிடைச் சொற்கள் حُرُوْفُ الْجَرِّ

அரபு மொழியில் 19 உருபிடைச் சொற்கள் உள்ளன.

اللاَّمُ	فِيْ	إِلَى	مِنْ	اَلْبَاءُ
اَلْكَافُ	عَلَى	عَنْ	وَاوُ رُبَّ	رُبَّ
بَاءُ الْقَسَمِ	وَاوُ الْقَسَمِ	حَتَّى	مُنْذُ	مُذْ
	عَدَا	حَاشَا	تاء القسم	خَلاَ

குறித்த ஒரு பெயர்ச்சொல்லுக்கு முன்னால் இந்த எழுத்துக்களில் ஒன்று வருமாயின் அந்தப் பெயர்ச் சொல்லின் இறுதி கட்டாயமாக جَرٌّ உடைய அடையாளம் பெற்று வரும். விளக்கத்துக்காக பின்வரும் உதாரணங்களை நோக்குவோம்.

இவ்வேற்றுமை உருபுகள் தனியாக வரும்போது பொருள் தராது. இன்னொரு பெயர்ச்சொல்லுடன் சேர்ந்து வரும்போது மட்டுமே முழுமையான பொருள் தரும்.

اَلْقَلَمُ فِيْ الْحَقِيْبَةِ — பேனா பையில் இருக்கிறது.

سَلَّمْتُ عَلَى الْمُسْلِمِيْنَ — முஸ்லிம்களுக்கு ஸலாம் சொன்னேன்.

بَحَثَتِ الْمُدَرِّسَةُ عَنِ الطَّالِبَتَيْنِ — இரு மாணவிகளை ஆசிரியை தேடினார்.

- இருமைப் பெயர்ச்சொற்களுக்கான جَرٌّ உடைய அடையாளம் ي வாக அமையும்.
- வேற்றுமை உருபுகள் வினைச்சொற்களுடன் சேர்ந்து வருவதில்லை.

اَلْبَاءُ ஆல், மூலம், இல்

كَتَبْتُ الرِّسَالَةَ بِالْقَلَمِ — கடிதத்தை பேனையால் எழுதினேன்.

هَذَا السِّكِّيْنُ مَصْنُوْعُ بِالْحَدِيْدِ — இந்தக் கத்தி இரும்பினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

أَسْكُنُ فِيْ حَيٍّ بِالْعَاصِمَةِ — தலைநகரில் உள்ள ஓர் ஒழுங்கையில் வசிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் செய்யப் பயன்படுத்தப்படும் வாவு.	சத்தியமாக	وَ ـــــ وَاوُ الْقَسَمِ

அல்லாஹ் மீது சத்தியமாக நான் உனது பணத்தைத் திருடவில்லை. وَاللهِ مَاسَرَقْتُ مَالَكَ

அல்லாஹ் மீது சத்தியமாக بِاللهِ

சத்தியம் செய்ய பயன்படுத்தப்படும் ب என்ற எழுத்து.	بَاءُ الْقَسَمِ

அல்லாஹ் மீது சத்தியமாக تَاللهِ

சத்தியம் செய்ய பயன்படுத்தப்படும் ت என்ற எழுத்து.	تَاءُ الْقَسَمِ

இருந்து / மூலம்	مِنْ

வீட்டிலிருந்து மஸ்ஜிதுக்கு நடந்து சென்றேன். ذَهَبْتُ إِلَى الْمَسْجِدِ مِنَ الْبَيْتِ سَيْراً عَلَى الأَقْــدَامِ

இந்த மேசை பலகையினால் செய்யப்பட்டதாகும். هَذَا الْمَكْتَبُ مِنَ الْخَشَبِ

இந்த வாகனம் அதிபருக்குச் சொந்தமானதாகும். هَذِهِ السَّيَّارَةُ لِلْمُدِيْرِ

புகழ் அல்லாஹ்வுக்குரியதாகும். اَلْحَمْدُ لِلَّهِ

எத்தனையோ காரிகள் அல்குர்ஆனை ஓதுகின்றனர். குர்ஆன் அவர்களை சபிக்கின்றது. رُبَّ قَارِئٍ يَقْرَأُ الْقُرْآنَ وَالْقُرْآنُ يَلْعَنُهُ

பற்றி	عَنْ

உனது சகபாடியைப் பற்றி ஆசிரியரிடம் வினவினேன். سَأَلْتُ الْمُدَرِّسَ عَنْ زَمِيْلِكَ

اَلْكَافُ

முஹம்மத் சிங்கத்தைப் போன்றவன். مُحَمَّدٌ كَالأَسَدِ

مُذْ

வெள்ளிக்கிழமை முதல் எனது நண்பனை சந்திக்கவில்லை. مَا قَابَلْتُ صَدِيْقِي مُذْ يَوْمِ الْجُمْعَةِ

مُنْذُ

மூன்று நாட்களாக பத்திரிகை வாசிக்கவில்லை. مَا قَرَأْتُ الْجَرِيْدَةَ مُنْذُ ثَلاثَةِ أَيَّــامٍ

இந்தப் புத்தகத்தை அதன் கடைசிப் பக்கம் வரை வாசித்தேன். قَرَأْتُ هَذَا الْكِتَابَ حَتَّى آخِرِ صَفْحَتِهِ

மீனை அதன் தலை வரை சாப்பிட்டான். أَكَلْتُ السَّمَكَةَ حَتَّى رَأْسِهَا

حَاشَا

ஸைதைத் தவிர அனைத்து மாணவர்களும் என்னிடம் வந்தனர். جَاءَنِي جَمِيْعُ الطُّلَّابِ حَاشَا زَيْدٍ

عَدَا

முஹம்மதை தவிர மாணவர்கள் அனைவரும் விளையாடினர் لَعِبَ الطُّلَّابُ عَدَا مُحَمَّدٍ

خَلاَ

அம்மாரைத் தவிர உனது நண்பர்களைச் சந்தித்தேன். قَابَلْتُ أَصْدِقَاءَكَ خَلاَ عَمَّارٍ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I learn every day!

Assalamu alaikum dear friends,
Glad to meet you again. I thought of taking you to the forests this time. Let's go to an African Savanna !!.

Have you heard about the African Savannas?

They are huge grass lands with short trees. If we just imagine Africa ,the picture of Savanna is the thing we're going to get in our mind most of the time.

They are home for a wide range of wild animals.

SO GET READY FOR A SAFARI.....!

Elephants

Can you see those animals? They are the greatest mammals on land, the Savannah elephants. They are herbivores, and feed on grasses, fruits, tree leaves, bark, shrubs, and vines.



African elephants live for about seventy years, and die when their molars wear down; they can't eat so they starve. Elephants are very social animals, and learn about what to eat, where to find water and how to behave from their mothers and older bulls.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Snake



Look at that snake. It has a brownish-gray body with a light belly and brownish scales along its back, isn't it? This is the black Mamba, the deadliest snake in the world. The Black Mambas feed on small mammals and birds, like voles, rats, squirrels, mice or rats.
No animal can actually kill them. Very dangerous!!

Zebra

We are lucky to spot those zebras! Wow, they really look cool together. The beautiful creation of Allah! The zebra is the horse of the savanna. Grant's zebra is the most abundant of the 3 species of zebra. The zebra looks like a horse, only smaller. It doesn't sound like a horse, and "barks" instead of neighs. It is easy to see a zebra in the middle of the grasslands because of its black and white stripes, but the stripes actually confuse a





Lion



Now get ready, we are going to meet the lions. The lion is the powerhouse of the savanna. Lions have dirty beige colored fur and rounded heads. Males have something females don't... manes. Manes are a ruff of long hair around the neck. Lions are the only cats that live in groups called prides. Don't you feel excited at the site of the 'king of the forest'?!!

Now friends, we have met so many animals, and it's time to relax for a while. I think you enjoyed the safari!!(Details - http:/www.blueplanetbiomes.org)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your corner

Entries by mail

EXAM SICKNESS

Exams are over,
A load of my head,
No studies For a While,
But short Naps in Bed.

Starring at my text books
Last week and before,
Learning and memorizing,
Till my poor eyes were sore.

Hard words in Literature
Fret songs in Tamil,
Not to forget Science,
Because they make me Sick,
Formulas in maths,
And dates in history,
Transactions in accounts.
But Sinhala a mystery

Who Created Exams?
I am Just Searching for him.
If I ever met him,
I'll kill him.

Exams are over,
A load of my head,
I hope my marks are "OKAY"
Or I"ll see stars in Bed.

Aakil ishak
D.S Senanayake College
2011 o/l batch

Sinharaja Forest



It is the first world heritage forest in Sri Lanka. The forest is lowest in 270 meter about the sea level. Its highest point is 1060 meter. Sinharaja has hills, and among them the tallest is Hinipitiya. Its peak is 1170 meters high. Many streams start from the high ground of the Sinharaja and fall into bigger rivers. There is a small waterfall called duhuvilli Ella. Perhaps it is named after the dust like spray of the waterfall. The rainfall in the area is high through out the year.

It makes the water ways rush and gush adding to the beauty to the land. The main attraction of Sinharaja to the visitor is the vegetation. There are great number of birds and the animals.. I like to visit Sinharaja forest.

Israth
Grade- 7 A
Gampola international school

Entry by post

Do you know the uncontracted forms?

- It's = It is
- I'll = I will
- I've = I have
- You'll = You will
- I'm = I am
- You'd = You would
- That's = T

Hilmiya Nijardeen
Madige Anukkana Muslim M.V
Anukkana, Sunandapura

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

01. i .அ. அருகிலுள்ள தேசப்படத்தை வரைந்தவர் யார்?



ஆ. அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

இ. அவர் இலங்கையை எப்பெயரால் அழைத்தார்? (3 புள்ளிகள்)

ii. புராதன நாணயங்கள் மூலமாக நாம் அறியும் தகவல்கள் 4 தருக? (4 புள்ளிகள்)

iii. சிந்துவெளி நாகரிகம் பற்றி விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இந்தியாவில் வாழ்ந்த ஆரியர்களின் சமூக, பொருளாதார அம்சங்களை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

01. i. அ. தொலமி ஆ. கிரேக்கம்
இ. தப்ரபேன்

ii. அது எக்காலத்திற்கு உரியது என்பதை அறியலாம்.

ஆட்சியாளருடைய பெயரை அறியலாம்.

நாடுகளுக்கிடையிலான வர்த்தகத் தொடர்பை அறியலாம்.

உ+ம்: உரோம நாணயங்கள் இலங்கையில் மாந்தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் செல்வச் செழிப்பை அறிந்து கொள்ளலாம். இரண்டாம் சந்திரகுப்தன் தங்கத்தில் நாணயங்களை வெளியிட்டான். இது குப்தர் காலத்தின் செல்வச் செழிப்பைக் காட்டுகிறது.

III. **சிந்துவெளி நாகரிகம்:**

உலகின் புராதன நதிக்கரை நாகரிகங்களுள் ஒன்றாக சிந்துவெளி நாகரிகம் விளங்குகின்றது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த நாகரிகம் இன்று பாகிஸ்தான் அமைந்துள்ள பிரதேசத்தில் காணப்பட்டது. இந்நாகரிகம் ஏனைய நாகரிகங்களை விட பரந்த ஒரு பிரதேசத்தில் காணப்பட்டது. மொகஞ்சதேரோ, ஹரப்பா, லோத்தல் முதலிய நகரங்கள் இந்நாகரிகத்தில் அமைந்திருந்தன.

இங்கு வாழ்ந்த மக்கள் ஆடம்பரமான நகர வாழ்க்கையை மேற்கொண்டார்கள். சிறந்த வீதியமைப்பும் மிகவும் வளர்ச்சியடைந்த வடிகாலமைப்பும் இங்கு காணப்பட்டன. இந்த நாகரிகத்தின் இடிபாடுகளிடையே காணப்படும் பொதுக் குளியலறை, இவர்களின் நாகரிக வளர்ச்சியைக் காட்டுகிறது. இவர்கள் இந்து மதத்தைப் பின்பற்றினார்கள் என்றும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. ஆரியரது வருகையினால் இந்த நாகரிகம் அழிந்தது என்றும் கூறப்படுகிறது.

PUBLIC LIBRARY

IV. **சமூக நிலை:**

ஆரியருடைய சமூகத்தில் வகுப்புப் பிரிவினை முக்கியமாகக் கருதப்பட்டது. சாதிமுறையை ஆரியர்கள் கடுமையாகப் பின்பற்றினர். அச்சமூகத்தில் நான்கு பிரிவுகள் இருந்தன. அச்சமூகத்தில் இருந்த முதலாவது சமூகப் பிரிவினர் பிராமணர். இவர்கள் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தார்கள். இவர்கள் முடிசூட்டு விழாவை நடத்துதல், முக்கிய சடங்குகளை நடத்துதல், கல்வி கற்பித்தல், வைத்தியம் செய்தல் போன்ற பணிகளைப் புரிந்தனர். அடுத்து சத்திரியர் இடம்பெற்றனர். தமது நாட்டை நிருவகிப்பதும் மக்களை பாதுகாப்பதும் இவர்களது கடமைகளாக இருந்தன.

வைசியர் சாதாரண பொதுமக்களாக அமைந்தனர். இவர்கள் விவசாயம், கைத்தொழில் முதலிய கடமைகளில் ஈடுபட்டனர். சூத்திரர் சமூகத்தில் அடிமட்டத்தில் இருந்த மக்களாவர். இவர்கள் கழிவுகளை அகற்றுதல், இறந்தவர்களை அடக்கம் செய்தல் முதலான கடமைகளைப் புரிந்தனர். இந்த நான்கு வகை சாதிப் பிரிவுகளும் ஆரிய சமூகத்தின் முக்கிய அம்சங்களாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நிலை:

ஆரியர்களின் பொருளாதாரம் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கிராமத் தலைவர் 'காமினி' என்று அழைக்கப்பட்டார். விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன மக்களின் பிரதான தொழில் நடவடிக்கைகளாக இருந்தன. கங்கை சமவெளியில் அவர்களது விவசாய நிலங்கள் அமைந்திருந்தன. இக்காலத்தில் ஆடு, செம்மறியாடு முதலியன அதிகமாக வளர்க்கப் பட்டன. தோல், கம்பளி முதலியவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் கால்நடைகளை வளர்த்தார்கள். ஒருவருடைய கால்நடைகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அவரு டைய சமூக மதிப்பு கணிக்கப்பட்டது.

11ம் தரம்

1. i. *1802, 1815, 1818 ஆகிய ஆண்டுகளில் இலங்கை வரலாற்றில் நடந்த முக்கிய சம்பவங்களை அதே ஒழுங்கில் தருக.* *(3 புள்ளிகள்)*

ii. *நிலத்தைப் பாழடையச் செய்யும் கொள்கை*
பாழ்நிலச் சட்டம்
அவுமில்தார் வரி வசூலித்தமை
மொல்லிகொட நிலமே ஆங்கிலேயரை ஆதரித்தமை
கிளர்ச்சியாளர்களிடம் ஒற்றுமை நிலவாமை
திட்டமிடாமை
கிளர்ச்சியாளர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டமை

மேற்குறிப்பிட்ட காரணிகளுள் கண்டியின் முதலாவது சுதந்திரக் கிளர்ச்சி தோல்வியடைய வழிவகுத்த நான்கு காரணிகளைத் தெரிவு செய்து எழுதுக. *(4 புள்ளிகள்)*

iii. *கண்டியில் இடம்பெற்ற விவசாயிகள் கிளர்ச்சிக்கு வழிவகுத்த இரண்டு காரணி களை விளக்குக.* *(5 புள்ளிகள்)*

iv. *கோல்புறூக் சீர்திருத்தங்களால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)*

விடைகள்

i. *1802 - இலங்கை முடிக்குரிய நாடாக மாற்றப்பட்டமை*

1815 - கண்டி கைப்பற்றப்பட்டமை

1818 - கண்டியில் முதலாவது சுதந்திரக் கிளர்ச்சி தோன்றியமை

ii. *நிலத்தைப் பாழடையச் செய்யும் கொள்கை*

மொல்லிகொட நிலமே ஆங்கிலேயரை ஆதரித்தமை

கிளர்ச்சியாளர்களிடம் ஒற்றுமை நிலவாமை

திட்டமிடாமை

iii. **பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை**

1815 மார்ச் 2ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தின் 05ஆம் வாசகத்தில், பௌத்த பிக்குகளுக்கும் விகாரைகளுக்கும் உரிய இடம் கிடைக்கும் என்று ஆங்கிலேயர் குறிப்பிட்டிருந் தார்கள். ஆனால், அவர்கள் உறுதி கூறியதன்படி நடந்து கொள்ளவில்லை. அவர்கள் கிறிஸ்தவ சமயத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். இதனால் பிக்குகள் அதிருப்தி அடைந்து சுதந்திரக் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கினார்கள். முன்பு பிக்குகளுக்கு சமூகத்தில் அதிக அந்தஸ்து இருந்தது. விகாரைகளுக்கு அதிக வருமானம் கிடைத்தது. இவை ஆங்கிலேயர் காலத்தில் அற்றுப்போயின.

பிரதானிகள் ஆங்கில ஆட்சியில் அதிருப்தி அடைந்தமை

கண்டியை ஆங்கிலேயர் கைப்பற்றுவதற்கு பிரதானிகள் பலர் உதவி செய்திருந்தனர். மகா அதிகாரம் எஹலபொல ஆங்கிலேயருக்கு உதவி செய்தார். தன்னை கண்டி மன்னனாக ஆங்கிலே யர் முடிசூட்டுவார்கள் என்று அவர் எதிர்பார்த் தார். அது நடைபெறாததனால் அவரும் கிளர்ச்சி யில் கலந்து கொண்டார். முன்பு பிரதானிகளுக்கு நிந்தகக் காணிகளிலிருந்து அதிக வருமானம் கிடைத்தது. ஆங்கிலேயர் காலத்தில் அது கிடைக் கவில்லை. மேலும் ஆங்கிலேயர் காலத்தில் பிரதானிகள் வரி செலுத்த வேண்டியிருந்தது. மேலும், ஊவா வெல்லஸ்ஸ பகுதியின் முகாந்திர மாக ஹஜ்ஜி மரிக்கார் நியமிக்கப்பட்டதனால் பிரதானிகள் அதிருப்தி அடைந்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

சட்டவாக்கக் கழகம் ஏற்படுத்தப்பட்டமை

முன்பு ஆளுநர் சட்டம் இயற்றுவதில் தன்னிச் சையாகச் செயல்பட்டார். அவருக்கு சட்டம் இயற்றுவதில் ஆலோசனை வழங்க யாரும் இருக்கவில்லை. கோல்புறூக் குழுவினர் ஆளுந ருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சட்டவாக்கக் கழகத்தை உருவாக்கினர். இதில் 15 அங்கத்தவர்கள் இடம்பெற்றனர். சட்டம் இயற்றும்போது ஆளுநர் இதன் ஆலோசனையைப் பெற வேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கப்பட்டார். இதன் மூலம் ஆளுநர் தன்னிச்சையாக சட்டம் இயற்றுவது தவிர்க்கப் பட்டது. சட்டவாக்கக் கழகமே இலங்கைப் பாராளுமன்றத்திற்கான வித்தாக அமைந்தது. இது டொனமூர் யாப்பில் அரசுக் கழகமாகவும் சோல்பரி யாப்பு காலத்தில் சனப் பிரதிநிதிகள் சபையாகவும் 72ஆம் ஆண்டு யாப்பில் தேசிய அரசுப் பேரவை யாகவும் 1978ஆம் ஆண்டு யாப்பில் பாராளுமன்றம் எனவும் அழைக்கப்பட்டது.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைதல்

கோல்புறூக் குழுவினர் கறுவா உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் அரசுக்கு இருந்த ஏகபோக உரிமையை அகற்றினர். இதனால் தனிப்பட்ட வர்களும் கறுவாச் செய்கையில் அக்கறை செலுத் தினர். பிரித்தானியர் கறுவாச் செய்கையை விருத்தி செய்வதற்காக நிலங்களை வழங்கினர். பல வரிச் சலுகைகளை வழங்கினர். இதனால் பெருந் தோட்டங்கள் அபிவிருத்தி அடைந்தன. ஆங்கி லேயர் கண்டியைக் கைப்பற்றிய பின்பு கோப்பிச் செய்கையில் ஆர்வம் காட்டினர். 1822 இல் ஜோர்ஜ் பர்ட் என்பவர் கம்பளையில் சிங்ஹ பிட்டி என்ற இடத்தில் கோப்பித் தோட்டத்தை ஆரம் பித்தார். தொடர்ந்து ஆங்கிலேயர் தேயிலைப் பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டினர். 1887இல் இலங்கையில் ஒன்றரை லட்சம் ஏக்கரில் தேயிலை பயிரிடப்பட்டது. கோல்புறூக் குழுவினர் கறு வாவை தனியாரும் உற்பத்தி செய்யலாம் என்று சிபாரிசு செய்ததே இவ்வாறு பெருந்தோட்டங்கள் வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்களாகும்.

ஆங்கிலம் போதனா மொழியாக மாற்றப்பட்டமை

கோல்புறூக் குழுவினர் இலங்கை யின் போதனா மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தனர். இதனால் பல விளைவுகள் ஏற்பட்டன. சிங்கள மொழிமூலப் பாடசாலைகளும் தமிழ் மொழிமூலப் பாடசா லைகளும் மூடப்பட்டன. இந்த இரு மொழிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. ஆங்கிலப் பாடசா லைகளே இயங்க வேண்டும் என்று கோல்புறூக் குழு விதித்தமையினால், நகரப் பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தில் கல்வி கற்கும் வசதி கிடைத்தது. அதேவேளை கிரா மத்தில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. சிங்களத் தில் கல்வி கற்ற மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்தே 1848இல் ஆங்கிலேயருக்கு எதிராக கண்டி மக்கள் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியில் மடுகல்ல திசாவை, திம்புலான திசாவை, தம்ப வின்ன திசாவை, எல்லேபொல ஆகிய சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகச் செயற்பட்டனர்.

(தமிழ் மொழியும் இலக்கியமும்
32ஆம் பக்க தொடர்)

திருவெண்ணெய் நல்லூரில் குளங்களில் வரால் மீன் நிறைந்திருத்தல், எருமைகள் நீராடப் புகுதல், அவற்றின் மடிகளில் மீன்கள் தாக்குதல், தன் கன்றுகள் என மீன்களை எருமைகள் எண்ணுதல், அதனால் பால் சொரிதல், அந்தப் பாலோ எருமைகள் தன்னிருப்பிடம் செல்லும் வரை சொரிந்த கொண்டே இருத்தல் என நீர்வ ளம், பால்வளம் பாடுவதன் மூலமும் இரக்கும் யாசகனை அஞ்சாதே எனக் கூறும் மக்களையு டைய ஊர் என்று கூறுவதன் மூலமும் சடையப்ப வள்ளல் கவியரசரால் புகழப்படுகி றார். அதாவது, சடையப்ப வள்ளலினால் அவரது ஊரும் பெருமையடைவதாக கம்பர் அழகாக எடுத்துரைக்கிறார்.

"மோட்டெருமை வாவி புக..." என்று தொடரும் செய்யுளில் நீர் காணும் சிறப்புக் களை விளக்குக.

சடையப்ப வள்ளளின் ஊரின் சிறப்பினை சிறப்பாகப் பாடி அதனூடே அவரின் கொ டைத்திறம் புலப்படத் துலக்கியிருக்கும் தன்மை நயத்தற்குரியது.

எருமைகள் நீர்நிலைகளில் புகுந்து நீராடுவ தும் மூழ்கிக் களிப்பதும் கண்கூடு. கம்பர் கவிச் சக்கரவர்த்தி, இவ்வாறு நீர்நிலைக்குள் புகுந்த எருமைகளின் மடியில் வரால் மீன்கள் முட்டு வதாகவும் உடன் எருமைகளின் மடி பால் சுரப்பதாகவும் அந்த எருமைகள் வீடு செல்லும் வரை பாலை சொரிவதாகவும் கூறுவது நயத்தற்குரியதாகயிருக்கிறது.

மேலும் மீன்களை தன் கன்றுகள் என எரு மைகள் நினைப்பதாகக் கூறுவதிலிருந்து கம்பர் சடையப்ப வள்ளலின் ஊரின் நீர்நிலை மீன்க ளின் வளர்ச்சித் தன்மை, பொழிப்பு, சிறப்பு, தொகை என்றவாறு சிறப்பித்துப் புலப்படுத்து வதைக் காண்கிறோம்.

பால்வளம், நீர்வளம் சிறப்பித்த கவிஞர் மக்களின் பண்பை மறக்கவில்லை. யாசக னைப் பார்த்து அஞ்சாதே என வாரிவழங்கி இனிமை மொழி பேசுபவர்களாகக் காட்டுகி றார். 'அடையா நெடுங்கதவு' என்கிறார்.

அத்துடன், 'உடையான் சடையப்பன் ஊர்' என்றவாறு சடையப்ப வள்ளலின் ஊர் சிறப்பி னூடாக அவரின் வள்ளல் தன்மையை புலப் படுத்துமாற்று நயம்படத்தக்கதாகவுள்ளது.

'தனிப்பாடல் திரட்டு' தாங்கிவரும் செய் யுள்களின் சுவையை தொடர்ந்தும் சுவைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கொலை... (3ஆம் பக்க தொடர்)

இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

"(நபியே!) ஆதமுடைய இரு புதல்வர்களின் உண்மை வரலாற்றை நீர் அவர்களுக்கு ஓதிக் காண்பியும்; அவ்வி ருவரும் இறைவனை நெருங்க குர்பான் கொடுத்தபோது, ஒருவரி டமிருந்து அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்றவரிடமி ருந்து அது ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. குர்பான் (ஏற்றுக் கொள்ளப்படாதவர்) நான் நிச்சயமாக உன்னைக் கொலை செய்து விடுவேன் என்று கூறினார். அதற்கு மற்றவர் மெய்யாகவே பயபக்தியுடைய வர்களிடமிருந்தே அல்லாஹ் ஏற்றுக் கொள் கிறான் என்று கூறினார்.

அன்றியும் "நீ என்னை வெட்டுவதற்காக என்னை நோக்கி உன் கையை நீட்டினால் நான் உன்னை வெட்டி வீழ்த்துவதற்காக என் கரங் களை உன் பக்கம் நீட்டமாட்டேன். ஏனெனில் நான் நிச்சயமாக உலகங்களுக் கெல்லாம் இறைவ னாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றேன். (என்றும் ஹாபில்) கூறினார்.

என்னுடைய பாவத்தையும் உன்னுடைய பாவத்துடன் நீ சுமந்து கொண்டு வருவ தையே நிச்சயமாக நான் விரும்புகின்றேன்; அப்பொழுது நீ நரகவாசிகளில் ஒருவனாகிவி டுவாய். இதுதான் அநியாயக்காரர்களுக்குரிய கூலியாகும் என்று (ஹாபில்) கூறினார்.

(அதன் பின்னரும்) அவருடைய மனம் தன் சகோதரனைக் கொன்று விடுமாறு தூண்டி யது; ஆகவே, அவர் (தம்) சகோதரரைக் கொலை செய்து விட்டார்; அதனால் அவர் நஷ்ட மடைந்தவர்களில் ஒருவராகிவிட்டார்.

பின்னர் தம் சகோதரரின் உடலை எவ்வாறு அடக்கம் செய்ய வேண்டும் என்பதை அறி விப்ப தற்காக அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பினான். அது பூமியைத் தோண்டிற்று (அடுத்த காகத்தை புதைப்பதற்காக) இதைப் பார்த்த அவர் **"அந்தோ நான் இந்தக் காகத் தைப் போலாவது இல்லாமலாகிவிட் டேனே! அப்படியிருந்திருந்தால் என் சகோதரனது உடலை மறைத்திருப் பேனே!" என்று கூறி கைசேதமடையக் கூடியவராக இருந்தார்."** (அல்மாயிதா: 27-31)

(40ம் பக்க தொடர்)

கீழ்வரும் சரியான பழமொழியின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

43. i. சிறு துள்ளி பெரு வெள்ளம்.
ii. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
iii. வாய் விட்டு அழுதால் நோய் விட்டுப் போகும். (.............)

44. i. மின்னுவதெல்லாம் தங்கம் அல்ல.
ii. சூடு கண்ட யானை அடுப்பங்கரை நாடாது.
iii. குரைக்கிற நாய் கடிக்காது. (.............)

45. i. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
ii. கட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
iii. பூனைக்கும் அடி சறுக்கும். (.............)

பிழை திருத்தி எழுதுக.

46. பாட்சோறு ....
47. பண்ணீர் ....
48. முற்க்கள் ....
49. காட்ச்சி ....
50. துறப்பு ....

டெஸ்ட்

பெரியவர்: தம்பி டெஸ்ட் எல்லாம் முடிஞ்சுதா?
சிறுவன்: இல்லை நடந்து கொண்டிருக்கு.
பெரியவர்: எப்ப முடியும்?
சிறுவன்: சிலவேளை நாலு நாளேலயும் முடியலாம்.
பெரியவர் : அதெப்படி?
சிறுவன்: அவுஸ்ட்ரேலியா அப்பிடி போல் பண்றாங்க.
பெரியவர்: ஓஹோ!

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

எம்.ஆர். முப்திகா ரிஸ்வான் (169)
அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம்
இஷட்.ஏ. ரிஸ்வான்-ஜே. முனவ்வரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 03

பெற்றோர் ஆசிரியர்களின் பொறுப்புகளும் கடமைகளும்



ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

மாணவர்களின் எதிர்கால இலட்சியப் பயணத்தின் இடையூறுகளாக அமையும் இணையத்திற்கு அடிமையாதல், போதைப் பொருள் பாவனை, மோசமான நண்பர்கள், காதல் விவகாரம் என்பவற்றைப் பார்த்தோம். இடையூறுகள் மாத்திரமன்றி எதிர்காலத்தையே தொலைக்கக்கூடிய இத்தகைய அம்சங்களைத் தடுக்க சமூகத்தில் உள்ள எல்லோரும் ஒன்றிணைந்து உழைத்தல் அவசியம். குறிப்பாக பெற்றோரும் பாடசாலை ஆசிரியர்களும் ஒருமுகப்பட்டு இவற்றை விட்டு மாணவர்களை அகற்றப் பாடுபட வேண்டும். இது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

பெற்றோரின் பங்களிப்பு

ஒரு குழந்தையை அது வாழும் சமூகத்திற்கு எல்லா விதத்திலும் பொருந்தச் செய்யும் சிறந்த ஆளுமை கொண்டதாக உருவாக்கும் பொறுப்பு அக்குழந்தையின் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் உள்ளது. சமூகமயமாக்கல், பண்பாட்டு மயமாக்கல், மொழிமயமாக்கல், தொழிநுட்ப மயமாக்கல் போன்ற சமூக, உளவியல் நடத்தைகளை வடிவமைப்பதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முன்னிலை வகிக்கின்றனர்.

பதின் வயது (Teenage) மாணவர்களிடையே பெற்றோரால் 25 வீதமான அளவே செல்வாக்குச் செலுத்த முடிகின்றது. ஏனெனில், பாடசாலை மாணவர்களின் நடத்தைகளில் 50 வீதத்திற்கும் அதிகமான செல்வாக்கை சம வயதுக் குழுவினரும் 20 வீதமான செல்வாக்கை ஊடகங்களும் செலுத்தி வருகின்றன. வயது ஒன்று முதல் எட்டு வயது வரை குறிப்பிட்ட குழந்தை மீதான பெற்றோரின் செல்வாக்கு 80 வீதமாக உள்ளது. ஆனால், குழந்தை 8 வயதை அடைந்து 16 வயதுக்குச் செல்லும்போது குழந்தைகளின் நடத்தைகள் மீதான பெற்றோரின் செல்வாக்கு குறைந்து தலைமுறை இடைவெளி (Generation Gap) தோன்றுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

பதின் வயதில் உள்ள பிள்ளைகள் படிப்படியாக சகபாடிகள், சமவயதினரின் பக்கம் சாய்வது இயல்பானது. இச்சந்தர்ப்பத்தில் சமவயதினரின் செல்வாக்கு குறித்த குழந்தை மீது அதிகமாகக் காணப்படும். அதுவரை காலமும் பெற்றோருடன் காணப்பட்ட மனவெழுச்சி ரீதியான உறவு அறுபட்டு சமவயதினரின் பக்கம் திருப்பப்படும். இருப்பினும் பெற்றோர் இந்நிலையைச் செங்கம்பளங் கொண்டு வரவேற்கவோ, பச்சைக்கொடி காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைப் பறக்க விடவோ கூடாது. மறுபக் கத்தில் வன்கரம் கொண்டு அடக்கி ஒடுக்கி முடக்கி விடவும் கூடாது.

இச்சந்தர்ப்பத்தில் பெற்றோர் நடுநிலை பேண வேண்டும். தம்முடைய பிள்ளைகள் யாருடன் நட்பு வைக்கின்றனர், அவர்களின் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுக்க வேண்டும். கல்வியில் ஆர்வமும் வேட்கையும் கொண்ட, நற்பண்பாடுகள் நிறைந்த சக மாண வர்களுடன் தம்முடைய குழந்தைக்கு நட்பை ஏற்படுத்தி விடலாம். தவிர சிறுவயதிலிருந்தே ஆன்மிக ரீதியான நம்பிக்கைகளை ஊட்டி, சமயக் கிரியைகளில் ஈடுபடக் கூடியவர்களாகவும் பயிற்று விக்கலாம்.

தமது குழந்தைகள் மீது பெற்றோரின் அவதா னமும் கண்காணிப்பும் எப்போதும் இருக்க காரணமாக ஏற்பட்ட இதுபோன்ற பிரச்சினை களைத் தீர்க்கவும் பெற்றோர் தம் பிள்ளைகளு டன் நண்பர்களைப் போன்று பழகி நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும். தமக்கு எத்தகைய பிரச்சி னைகள் ஏற்பட்டாலும் அதற்கு நல்ல தீர்வு குடும் பத்தினர் மற்றும் உறவினர்களிடத்தில் கிடைக்கும் என உளப்பூர்வமாக அவர்கள் நம்பும் விதமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பெற்றோர், உற்றாருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் ஏற்ப டக்கூடிய முரண்பாடுகள் தவிர்க்க முடியாது போகும். எந்தவொரு தவறான காரியத்தையும் திருத்த முனையும் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் அன்பாகவும் பண்பாகவும் கலந்துரையாட வேண்டும். தண்டிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் யாருக்கும் தெரியாத வகையில் நான்கு சுவருக்கு மத்தியில் வைத்துத் தண்டிப் பதோடு தண்டனைக்கான காரணத்தையும் குற்றத்தின் தராதரத்தையும் விளக்க வேண்டும்.

காதல் விவகாரம், நவீன ஊடகங்களின் இருண்ட பக்கங்கள், போதைப் பொருள் பாவனையின் ஆபத்தான விளைவுகள் போன்றன குறித்து மாணவர்களை விழிப்படையச் செய்யலாம். போதைப் பொருள் பாவனைக்கெதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மாணவர்களை அவற்றில் பங்குபற்றச் செய்யலாம்.

வேண்டும். வயது 1- 16 வரை முடியுமான அளவு பிள்ளைகளை அரவணைத்துச் செல்ல வேண்டும். அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதோடு அவர்களது எதிர்காலத்தின் மீது அக்கறையும் செலுத்த வேண்டும். எந்த வகையி லும் அவர்களுக்கு சிறு பாதிப்பும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாகவும் அக்கறையாகவும் இருக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் துஷ்பிரயோகத்துக்கு ஆட்படுவதை விட்டும் பிள்ளைகளைப் பாதுகாக்க உதவுகிறது.

இப்பருவத்தில் பிள்ளைகளால் எதிர்பார்க்கப் படும் அன்புத் தேவை மிகப் பிரதானமானது. இது பெற்றோரால் பூரணப்படுத்தப்படும்போது வழிதவறிச் செல்வதற்கான வாய்ப்புகள் குறைகின் றன. பதின் வயதை எட்டியதும் பிள்ளைப் பரா மரிப்பை முற்றாக விட்டுவிடக் கூடாது.

காதல் விவகாரம் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்கவும் சமூக நிலைமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி நவீன தொலைத்தொடர்பு சாதன வசதிகளைச் செய்யும் பெற்றோர் அவதானமாக இருப்பது மிக முக்கியம். பிள்ளைகளுக்காக வாங்கும் கையடக்கத் தொலை பேசி மிக எளிமையானதாக இருப்பதுடன் தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தும் பக்குவத்தை ஆரம்பத்திலிருந்தே பழக்க வேண்டும். கணினி களை மாணவர்களின் தனி அறைகளில் வைக்கா மல் யாவருடைய பார்வையும் படும்படியான பொது இடமொன்றில் வைப்பது உசிதமானது. குறிப்பாக இன்டர்நெற் வசதி கொண்ட கணினி களை இப்படியான இடம் ஒன்றிலேயே வைக்க வேண்டும்.

பிள்ளைகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் விருப்பங்கள், ஆசைகளுக்கேற்ப சிறந்த இலக் கைத் தீர்மானித்து அல்லது தீர்மானிக்கச் செய்து அது நோக்கிப் பயணிக்க தொடர் ஊக்கமும் ஒத்து ழைப்பும் பாதுகாப்பும் வழங்க வேண்டியது பெற்றோர் மீதுள்ள பொறுப்பாகும்.

ஆசிரியர்களின் பங்களிப்பு

ஒரு குழந்தையின் ஆளுமையை விருத்தி செய்கின்ற சமூகமயமாக்கல் முகவர்களுள் பெற்றோருக்கு அடுத்தாக முக்கியம் பெறுபவர் கள் ஆசிரியர்களாவர். மாணவப் பருவம் என்பது பிசைந்த களி மண்ணுக்கு ஒப்பானது. அதை விரும்பும் வடிவத்தில் உருவாக்கும் வல்லமையும் பொறுப்பும் ஆசிரியர்களுக்குண்டு. வெறும் வெள்ளைக் கடதாசிகளாக வரும் மாணவச் செல்வங்களை நாளைய சமூத்தில் எதிர்நோக்க நேரிடும் சவால்களுக்கு முகம் கொடுத்து இலக்கை நோக்கிய பயணத்தில் வெற்றிநடை போடத் தேவையான ஆளுமைகளை உருவாக்கும் பணி ஆசிரியர்களின் தார்மீகப் பொறுப்பாகும்.

மேலே கூறப்பட்ட இலட்சியத்துக்கெதிரான தடைகள் குறித்தும் அவற்றின் பாரதூரம் பற்றியும் அறிவியல் ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் மாணவர் களுக்கு விளக்கலாம். தமது வாழ்க்கையில் நல்ல நண்பர்களைத் தேர்வு செய்வதன் முக்கியத்துவம், நல்ல நண்பர்களின் பண்புகள் மற்றும் நடத்தைகள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றியும் மோசமான நட்பின் விபரீதம் குறித்தும் ஆசிரியர்கள் மாணவர் களுக்கு அறிவூட்ட வேண்டும்.

காதல் விவகாரம், நவீன ஊடகங்களின் இருண்ட பக்கங்கள், போதைப் பொருள் பாவ னையின் ஆபத்தான விளைவுகள் போன்றன குறித்து மாணவர்களை விழிப்படையச் செய்ய லாம். போதைப் பொருள் பாவனைக்கெதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மாணவர்களை அவற்றில் பங்குபற்றச் செய்யலாம்.

தேசிய அபாயகரமான போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபையினால் மேற்கொள்ளப்படும் ஒரு துணை நிகழ்ச்சியாக போதைப் பொருள் பாவனையைத் தடுத்தல் தொடர்பான செய்தி களைப் பாடசாலைகளின் சுற்றுப்புற மதில்களில் காட்சிப்படுத்தும் வேலைத்திட்டம் கொழும்பு மாவட்டத்திலுள்ள 14 பாடசலைகளில் இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்த பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வத்தோடு கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

இது போன்று, இணையத்துக்கு அடிமையாதல், பேஸ்புக் போன்ற சமூக வலைத் தளங்களுக்கு அடிமையாதல் தொடர்பான கட்டுரைப் போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதோடு மாணவர் மன்றங்களில் விவாத நிகழ்ச்சிகள், ஊடுருவல் மற்றும் குறு நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதனூடாக மாணவர்களைத் தெளிவடையச் செய்யலாம்.

மாணவர்கள் சாதாரண ஒரு கல்லைப் போன் றவர்கள். பெற்றோரும் ஆசிரியர்களும் சிற்பி களைப் போன்றவர்கள். அவர்களுக்குக் கொடுக்கும் அறிவுரைகளும் வழிகாட்டல் மற்றும் பயிற்சிகளும் உளியைப் போன்றது. கற்களை அழகிய சிற்பங்க ளாக மாற்றுவது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அமானிதமான பொறுப்பாகும். ■

PUBLIC LIBRARY

இந்த இலக்கம் தற்பொழுது பாவனையில் இல்லை: 011206575

அகரம் இதழின் ஆசிரிய பீடத்தைத் தொடர்பு கொள்ள: 0112698771

விநியோகம், பணம் செலுத்தல், அகரம் இதழின் விற்பனை, சந்தா ஆகிய தொடர்புகளுக்கு: 0112689324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய வேலையைத் தொடர்வது



வருட ஆரம்பத்தில் நாம் செய்ய வேண்டிய வேலைகள் என்று பல்வேறு வேலைத்திட்டங்களைப் பட்டியலிட்டிருப்போம். ஜனவரியில் உற்சாகமாக ஆரம்பித்திருந்தாலும் பெப்ரவரி ஆகும்போது வேலைகள் சோர்வடைய ஆரம்பித்திருக்கலாம். இது ஆபத்தானது! எனவே, தொடங்கிய வேலைகளை எப்பாடுபட்டாவது தொடர்வது என்று உங்களுக்குள் திடசங்கற்பம் பூண்டு கொள்ளுங்கள்; தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது உங்கள் திட்டமிடலை மீட்டுங்கள். உங்களிடம் சிறப்பான திட்டம் இல்லாதபோது உங்களால் தினமும் செயற்பட முடியாது. உங்கள் இறுதி இலக்கு வரையறுக்கப்பட்டு அதற்கான நாளாந்தத் திட்டமிடல் இல்லாதபோது உங்களால் எப்படி தொடங்கிய வேலையைத் தொடர முடியும்?

தினமும் உங்களால் செய்ய முடியுமான ஒரு வேலையைக் குறித்துக் கொண்டு தினமும் தூங்கச் செல்லும்போது அவ்வேலையை சிறப்பாக நிறைவேற்றிய மனநிறைவோடு, வெற்றியோடு தூங்கச் செல்லுங்கள்.

அந்த வேலை சிறப்பாக நடைபெறுகின்ற போது உங்களால் நேரம் ஒதுக்க முடியுமான மற்றொரு வேலையையும் அதனுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். அதனையும் தினமும் பரீட்சித்துப் பாருங்கள். வெற்றிகரமாக ஒவ்வொரு வேலையையும் நிறைவு செய்த திருப்தியுடனே ஒவ்வொரு நாளையும் நிறைவு செய்யுங்கள்.

"உலகில் கோடீஸ்வரனாக சமாதிக்குச் செல்வது ஒரு பெரிய விடயமல்ல. தினமும் இரவில் தூங்கச் செல்ல முன் நான் இன்று ஏதாவது அற்புதமாகச் செய்துள்ளேனா என்பதுதான் என்னைப் பொறுத்தவரை முக்கியமான விடயம்" என்றார் ஸ்டீவ் ஜொப்ஸ்.

தொழிநுட்ப உலகில் எவையெல்லாம் செய்ய முடியாதவை என பெரிய பெரிய நிறுவனங்களெல்லாம் நம்பிக்கையிழந்திருந்தனவோ அவற்றையெல்லாம் சாதித்துக் காட்டியவர்தான் ஸ்டீவ் ஜொப்ஸ். நீங்களும் சாதிக்க விரும்பினால் ஒவ்வொரு நாளையும் வெல்லுங்கள். ஒவ்வொரு மணித்தியாலத்தையும் வெல்லுங்கள்.

இமாம் ஹஸனுல் பஸரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

"மனிதா நீ நாட்களின் தொகுதி என்பதை அறிந்து கொள். உனக்கென்று சில நாட்கள் இருக்கின்றன. அவற்றின் தொகுதியாகவே நீ இருக்கின்றாய். ஒவ்வொரு நாளும் முடிவடைய உனக்குரிய நாளும் முடிவடைந்து நீயும் முடிவடைந்து உனக்குரிய நாட்களின் தொகுதியும் முடிவடைந்து உனது வாழ்க்கை நிறைவு பெற்று இவ்வுலகை விட்டுப் பிரிகின்றாய்."

பல வேலைகளை ஒன்றாக ஆரம்பித்து அவற்றைப் பாதியில் விடுவதைவிட ஒவ்வொன்றாக ஆரம்பித்து அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவது சிறந்தது அல்லவா?

உங்கள் வேலைக்குத் தடையாக அமையும் பல்வேறு காரணிகளையும் அடையாளம் கண்டு அவற்றிலிருந்து விடுபடுவது எப்படி என்று சிந்தித்துப் பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய தினப் போட்டிகளில் பங்குபற்றி வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களுக்குத் தெரிவான கஹட்டோவிட்ட பாலிகா வித்தியாலய மாணவிகள் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான ஆசிரியைகளுடன் காணப்படுகின்றனர்.

அகரத்தின் வினா-விடைப் போட்டி-13

முதலாம் பரிசு
ஏ.ஆர்.எல். ரிஸ்னா. மாவனல்லை

வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான நூல்கள், இறுவட்டுக்கள் வழங்கப்படும்.

(உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி, பெப்ரவரி 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி
அகரம்
வினா-விடைப் போட்டி
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09

வினாக்கள்

1. அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பய்யா அவர்களின் பிரதான ஆய்வுத் துறை எது?
2. இலங்கை எத்தனை ஆண்டுகளாக அந்நிய ஆட்சியின் கீழ் இருந்தது?
3. இலங்கையில் தேசாதிபதி முறை நீக்கப்பட்டது எப்போது?
4. 'முஹம்மத்' சிங்கத்தைப் போன்றவன் என்பதை அறபியில் தருக.
5. பதின் வயதினர் மீது பெற்றோரின் செல்வாக்கு எத்தனை வீதம்?
6. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு சென்ற பின் நபியவர்கள் சகோதரத்துவ பிணைப்பினால் இணைந்த இருவரைக் குறிப்பிடுக.
7. Galaxy classic எனும் கருந்துளை பூமியிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது?
8. வருடத்திற்கு பூமியை விட்டு சந்திரன் எவ்வளவு தூரம் தள்ளிச் செல்கிறது?
9. ஐ.நாவின் முதலாவது பொதுச் செயலாளர் யார்?
10. உலகில் முதலாவது விமானியாகப் பணிபுரிந்த பெண்மணி யார்?

பரிசுக்குரியவர்கள்:

எஸ்.எச்.எப். ருஸ்னா, மக்கொன
எம்.எஸ்.எப். றுசைக்கா, அட்டாளைச்சேனை
எம்.எப். அப்துர் ரஹ்மான் அஹமட், புதிய காத்தான்குடி
எஸ்.எம். ஸஅத், நிந்தவூர்
ஏ.எஸ். அஹ்ஸன், அகலவத்த
நுஸ்ரத் இம்தியாஸ், மாவனல்லை
எம். சுஜைதா, நிந்தவூர்
ஜே. ஸனோ நஸ்ஹத், மருதமுனை
எம்.என்.எப். தன்ஸீலா, மடிகே
எம்.ஏ.எப். ரஸ்னா, உலப்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எஸ்.எம்.ஏ. ஸலாம், மாவனல்லை

சமன்பாடுகள்

எளிய சமன்பாடுகள் ஒரே ஒரு தெரியாக் கணியத்தைக் கொண்டவை என்பதை நாம் அறிவோம்: அவை நேரடியாகவோ அல்லது தரவுகளை அறிந்து சமன்பாட்டை உருவாக்குவதன் மூலமோ தீர்க்கப்படலாம்.

நேரடியாக: $2a+3=11$ ஐ தீர்க்க.

$$2a = 11-3$$
$$2a = \frac{8}{2}$$
$$a = 4$$

சமன்பாட்டை உருவாக்குவதும் பின்னர் தீர்ப்பதும்

எண் ஒன்றின் இரண்டு மடங்குடன் 3ஐக் கூட்ட பெறப்படும் எண் 11 ஆகும் எனின், அவ்வெண்ணைக் காண்க.

அவ்வெண் x எனின்,

இரண்டு மடங்கு $2x$ ஆகும்.

3ஐக் கூட்ட $2x+3$ ஆகும்.

$$2x+3=11$$
$$2x3 = 11-3$$
$$2x=8$$
$$\therefore\ 2x=\frac{8}{2}$$
$$\therefore\ x=4$$

அவ்வெண் 4 ஆகும்.

இவ்வாறே ஒருங்கமை சமன்பாடுகளையும் நாம் அவதானிக்கலாம்.

ஒருங்கமை சமன்பாடுகள்

ஒன்றுக்கு மேற்பட்ட தெரியாக் கணியங்களைக் கொண்டவை ஒருங்கமை சமன்பாடுகளாகும்.

உ+ம்:

$a+b=5$

$a-b=1$ எனின் a, b யின் பெறுமதிகளைப் பெறுக. இங்கு a இனதும் b இனதும் கூட்டுத் தொகை 5 ஆகும். a இலிருந்து b ஐ கழிக்க பெறுவது 1 ஆகும்.

$a+b=5$ ---- (1) (முதலாம் சமன்பாடு)

$a-b=1$ ---- (2) (இரண்டாம் சமன்பாடு)

$$(1)+(2)\quad 2a=6$$
$$a=\frac{6}{2}$$
$$\therefore\ a=3$$

(இங்கு நாம் கையாளும் உத்தி யாதெனில், இரு சமன்பாடுகளினதும் இடது பக்கப் பெறுமானங்களின் கூட்டுத்தொகை அவற்றின் வலது பக்கப் பெறுமானங்களின் கூட்டுத்தொகைக்குச் சமமாகும் என்பதே ஆகும். இது ஒரு வெளிப்படை உண்மையாகும். 1ம் சமன்பாட்டையும் 2ம் சமன்பாட்டையும் கூட்டுவதற்கு காரணம் b எனும் கணியத்தை நீக்கி a இல் ஒரு எளிய சமன்பாட்டைப் பெறுவதே ஆகும். சமன்பாடு (1)இல் $+b$ யும் சமன்பாடு (2)இல் $-b$ யும் அவதானிக்கப்பட்ட பின் அவற்றைக் கூட்ட அவை பூச்சிய மாகும் எனும் தெரிவுமுறை இங்கு பயன்படுத்தப் பட்டுள்ளது.)

இனி $a=3$ எனின் சமன்பாடு (1) இல்

$$a+b=5$$
$$\therefore\ 3+b=5$$
$$b=5-3$$
$$b=2$$
$$\therefore\ \begin{Bmatrix} a=3 \\ b=2 \end{Bmatrix}$$

இரு தெரியாக் கணியங்களைப் பெறும் இம் முறையானது நீக்கல் முறை என அழைக்கப்படுகிறது. இங்கு b எனும் கணியம் நீக்கப்பட்டு a பெறப்படுகிறது.

இவ்வினாவை சில மாணவர்கள் பின்வரு மாறும் விடை காண முற்படுவர்.

$$a+b=5 \text{ ஆகையால்}$$
$$a=5-b$$

சமன்பாடு (2)இல் $a-b=1$ எனவாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$5-b-b=1$ ஆகும்

($a=5-b$ ஐ பிரதியிடுவதால்)

∴ $5-2b=1$

$-2b=1-5$

$-2b=-4$

$b=\frac{-4}{-2}$

$=2$

$b=2$ எனின் சமன்பாடு (1)இல் பிரதியிட

$a+b=5$ என்பதால்

$a+2=5$

$a=5-2$

$a=3$ ஆகும்.

∴ $\begin{Bmatrix} a=3 \\ b=2 \end{Bmatrix}$

(நீக்கல் முறையே இங்கு எளிது எனினும், கணித செய்கைகளின் பல்வேறு வகைகளையும் நாம் கற்றிருத்தல் சாலச் சிறந்ததாகும்.)

சென்ற வருடம் (2011) க.பொ.த. (சா/த) கணித வினா பகுதி Aஇல் 4(a) வினாவை அவதானிப் போம்.

வினா: ஒரு தோடம் பழத்தையும் 3 கொய் யாப் பழங்களையும் வாங்குவதற்கு ரூபா 65 செல விடப்படுகின்றது. 3 தோடம் பழங்களை வாங்கும் பணத்தைக் கொண்டு 4 கொய்யாப் பழங்களை வாங்கலாம்.

i. ஒரு தோடம் பழம் ரூபா x எனவும் ஒரு கொய்யாப் பழம் ரூபா y எனவும் கொண்டு மேற்குறித்த தகவல்களை காட்டுவதற்கு ஓர் ஒருங்கமை சமன்பாட்டு சோடியை உரு வாக்குக.

ii. மேற்குறித்த ஒருங்கமை சமன்பாடுகளை தீர்ப்பதன் மூலம் தோடம்பழம் ஒன்றினதும் கொய்யாப் பழம் ஒன்றினதும் விலைகளைக் கர்ண்க.

3. பணம் எஞ்சி இருக்காதவாறு ரூபா 50 இற்கு வாங்கத்தக்க தோடம்பழங்களின் எண்ணிக் கையையும் கொய்யாப் பழங்களின் எண் ணிக்கையையும் காண்க.

ஒரு தோடம்பழம் ரூபா x, ஒரு கொய்யாப் பழம் ரூபா y

∴ 3 கொய்யாப் பழம் ரூபா $3y$

∴ $x+3y=65$ ----- (1)

$3x=4y$ ----- (2)

இதேபோல்

சமன்பாடு (1) இல் $x+3y=65$

(1) × 3:- $3x+ay=65\times 3$ ----- (3)

(2): $3x=4y$

(3) - (2) $ay=65\times 3-4y$

$ay+4y=65\times 3$

$13y=65\times 3$

∴ $y=\frac{65\times 3}{13}$

$y=5\times 3$

$y=15$

இங்கு புள்ளிக்கோடிடப்பட்ட பகுதியை அவதானியுங்கள். $3x+ay=65\times 3$ என எழுதப் பட்டுள்ளது. சமன்பாடு (1)ஐ 3இனால் பெருக் கும்போது சமன்பாடு (2)இல் $3x=4y$ என அமைந்திருப்பதனாலேயே ஆகும். இதனால் x கணியம் நீக்கப்பட்டுள்ள செய்கைவழி தொடர்கிறது.

y இன் பெறுமதியை (1) இல் பிரதியிடுக.

$x+3y=65$

$x+3\times 15=65$

$x+45=65$

$x=65-45$

$x=20$

∴ ஒரு தோடம்பழம் ரூபா 20

ஒரு கொய்யாப்பழம் ரூபா 15

பணம் எஞ்சியிருக்காதவாறு ரூபா 50க்கு a தோடம்பழங்களையும் b கொய்யாப் பழங்களை யும் வாங்கலாம் என்போம்.

∴ $20a+15b=50$ ஆகும்.

$a=1$ எனின்

$20\times 1+15b=50$

$15b=50-20$

$15b=30$

$b=\frac{30}{15}$

$b=2$

a இற்கு 1ஐத் தவிர ஏனைய எப்பெறுமானங் களை பிரதியிடினும் b இன் முழு எண் பெறுமா னங்கள் கிடைக்கப்பெறாது. ஆகையால், வாங்கக் கூடிய எண்ணிக்கை.

தோடம்பழம் 1 கொய்யாப்பழம் 2

($1\times 20 + 2\times 15 = 20+30 = 50$)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் 64வது சுதந்திர தினம்

பெப்ரவரி 04, 2012

எடுத்து வைத்தனர். உள்நாட்டுக் கலவரங்களையும் பலவீனத்தையும் பயன்படுத்தி 1517ல் இலங்கையின் கரையோரப் பகுதிகள் முழுவதையும் கைப்பற்றினர். இவர்கள் இந் நாட்டின் வளங்களைச் சூறையாடியதுடன் அவர்களது மதமான கத்தோலிக்க மதத்தினைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டனர்.





சுதந்திரமாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக வாழ்வதையே விரும்புவான். தனி மனிதனே சுதந்திரமாக வாழ விரும்பும்போது ஒரு நாடு இன்னொரு நாட்டின் அடிமைத்தளையில் வாழ விரும்புமா? ஆனாலும் அதிகாரவெறி பிடித்தோர் என்றும் ஏனையோரை தமது அதிகாரத்தின் கீழ் வைத்துக் கொள்ளவே விரும்புவர். இந்த வகையில்தான் ஒரு கட்டத்தில் உலகில் அதிகாரமும் பலமும் கொண்ட தேசத்தவர்கள் ஏனைய நாடுகளின் மீது படையெடுத்தனர்.

வரலாற்றுக் காலங்களில் அதன் அமைவிடம் காரணமாக பலரின் கவனத்தை இலங்கை ஈர்த்திருந்தது. இந்து சமுத்திரத்தின் முத்து, இரத்தின துவீபம், லங்காபுரி என பல சிறப்புப் பெயர்களால் இது அழைக்கப்பட்டது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இத்தீவானது வளம் நிறைந்து காணப்பட்டதால் உலகளவில் பிரபலமடைந்த தேசமாகவே விளங்கியது. இதனால்தான் பலரும் இத்தேசத்திற்குப் பல்வேறு பெயர்களை சூட்டினர்.

இந்த வகையில் 1505ம் ஆண்டு பிரான்சிஸ் கோ டி அல்மேதா தலைமையில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் போர்த்துக்கேயர் காலடி

1602ல் ஒல்லாந்துத் தளபதி ஜோரிஸ் வான் ஸ்பில் இலங்கையில் காலடி எடுத்து வைத்தார். அப்போது கண்டியை ஆட்சிசெய்த 2ம் இராஜசிங்கள் அவரிடம் உதவி கேட்டான். இதனால் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை விரட்டுவதற்கு மன்னனுக்கு உதவினர். பின்னர் அவர்கள் இந் நாட்டைக் கைப்பற்றி அவர்களும் இந் நாட்டு வளங்களைச் சூறையாடியதுடன் புரட்டஸ்தாந்து மதத்தினை பரப்பினர். 1660ல் கண்டியைத் தவிர இலங்கையின் அனைத்துப் பகுதிகளையும் ஒல்லாந்தர் கைப்பற்றினர்.

1796ல் ஒல்லாந்தரைத் துரத்தி விட்டு ஆங்கிலேயர் இந் நாட்டைக் கைப்பற்றினர். 1815ல் பிரித்தானியர் மத்திய மலைநாடு முதல் சகல பிரதேசங்களையும் கைப்பற்றி முழு இலங்கையையும் தமதாக்கினர். 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரம் பெற்ற காலம் வரை 152 வருடங்கள் பிரித்தானியர் ஆட்சி செய்தனர்.

சுமார் 443 ஆண்டுகள் வெளிநாட்டினரின் கட்டுப்பாட்டினுள் இருந்த இலங்கையை மீட்டெடுப்பதில் இலங்கையர் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றிப் போராடினர். அவர்களுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி. பி. ஜாயா	ராசிக் பரீட்	சேர் பொன்னம்பலம் இராமநாதன்	டீ. எஸ். சேனாநாயக்கா	எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க	சேர் ஜோன் கொத்தலாவல

சேர்பொன்இராமநாதன், சேர்பொன் அருணாசலம், ரி. பி. ஜாயா, ராசிக் பரீட், டீ. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கை மக்கள் ஒற்றுமையாக தங்களது எதிர்ப்பைக் காட்டியமையினால் 1948.02.04ஆம் திகதி இலங்கை காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டது.

அந்நியர் மிஷனரிகளை உருவாக்கியதுடன் இந்நாட்டின் பெருமளவான வளங்களைச் சுரண்டினார். இந்நாட்டு பௌதிக வளங்களைச் சூறையாடிச் சென்று அவர்களது நாட்டை வளப்படுத்தினர். இந்நாட்டு மக்களுக்கு அவர்களது மதத்தைத் திணித்தனர். அவர்களது மதத்தைத் தழுவியோருக்கு ஏராளமான சலுகைகளை வழங்கினர்.

ஒரு காலத்தில் நெற்பயிர்ச் செய்கையில் தன்னிறைவடைந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடாகத் திகழ்ந்த இலங்கையை பிறநாடுகளிடமிருந்து நெல் இறக்குமதி செய்யும் நிலைக்கு மாற்றினர். அவர்களது வர்த்தகப் பயிர்களான தேயிலை, கோப்பி, கொக்கோ, இறப்பர் முதலானவற்றை அறிமுகம் செய்து மலிவான கூலிகளாக தென்னிந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டு வந்து இந்நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தனர்.

இத்தகைய அநியாயங்களுக்கெதிராக கொதித்தெழுந்த எம்முன்னோர் சாத்வீக ரீதியான போராட்டங்களை மேற்கொண்டனர். அவ்வப்போது எழுந்த இப்போராட்டங்கள் ஆங்கிலேயரால் அடக்கியொடுக்கப்பட்டாலும் அவற்றால் சுதந்திர தாகம் கொண்ட சுதேசிகளின் உணர்வுகளை அழித்துவிட முடியவில்லை. இதன் விளைவாக 1948 பெப்ரவரி 04ஆம் திகதி அந்நிய ஆட்சியிலிருந்து இந்நாடு விடுதலை பெற்றது.

சுதந்திர இலங்கையின் பிரதமர்கள்

1) டி.எஸ். சேனநாயக்க (1947-1952)
2) டட்லி சேனநாயக்க (1952-1953)
3) சேர் ஜோன் கொத்தலாவல (1953-1956)
4) எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க (1956-1959)
5) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (1960-1965)
6) டட்லி சேனநாயக்க (1965-1970)
7) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (1970-1977)
8) ஜே.ஆர். ஜயவர்தன (1977-1978)
9) ரணசிங்க பிரேமதாஸ (1978-1989)
10) டி.பி. விஜேதுங்க (1989-1993)
11) ரணில் விக்கிரமசிங்க (1993-1994)
12) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (1994-1999)
13) சந்திரிக்கா பண்டாரநாயக்க (1999-2001)
14) ரணில் விக்கிரமசிங்க (2001-2004)
15) மஹிந்த ராஜபக்ஷ (2004-2005)
16) ரட்ணசிறி விக்கிரமநாயக்க (2005-2010)
17) டி.எம். ஜயரத்ன (2010-இன்றுவரை)

இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் ஜனாதிபதிகள்

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பாராளுமன்ற ஆட்சி முறையே நிலவியது. ஆனால் அதுவரை காலமும் சிலோன் என அழைக்கப்பட்ட இந்நாடு இலங்கை சோசலிஸ ஜனநாயகக் குடியரசு என பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு 1972ம் ஆண்டு முதல் தேசாதிபதி முறை நீக்கப்பட்டு பெயரளவிலான ஜனாதிபதி முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1978ம் ஆண்டு யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமுலுக்கு வந்தது. இதன் பிரகாரம் இலங்கையில் ஜனாதிபதியாக பதவி வகித்தோர்:

1. ஜே.ஆர். ஜயவர்த்தன (1978 - 1989)
2. ஆர். பிரேமதாஸ (1989 - 1993)
3. டீ.பி. விஜயதுங்க (1993 - 1994)
4. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (1994 - 2005)
5. மஹிந்த ராஜபக்ஷ (2005 - இன்று வரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெற்றிக்கு ஆரோக்கியமான மனோநிலை

ஜே.எம். அஸீம்

உங்கள் மனோநிலையே உங்கள் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும். எதையும் நலவாக சிந்தித்து அதிலுள்ள நலவை மாத்திரம் எடுத்தால் அவற்றை நலவாகவே மாற்றி விடலாம். மனோநிலை என்பது உங்கள் கற்றலில் மிகவும் செல்வாக்கு செலுத்துகின்றது.

உங்களைப் பார்த்து யாராவது உனக்கு படிப்பே ஏறாது என்று சொல்லும்போது நீங்களும் ஆம் எனக்குப் படிப்பே ஏறாது என்று முடிவெடுத்தால் உங்கள் நிலைமை என்னவாகும்? தோமஸ் அல்வா எடிசனைப் பார்த்து அவரது ஆசிரியர் சொன்ன வார்த்தை என்ன தெரியுமா? உனக்கு படிப்பே ஏறாது என்பதுதான்.

> **எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொள்ளும் மனோ தைரியத்துடன் ஆரோக்கியமான மனோநிலையுடன் இருங்கள். வெற்றி உங்களை வாழ்த்தி வரவேற்கும். மனோ நிலை என்பது முக்கியமானது. நீங்கள் வெற்றியடைகின்ற சந்தர்ப்பத்தைவிட தோல்வியடைகின்ற சந்தர்ப்பங்களில் அது மிக முக்கியமானதாகின்றது.**

உலகில் ஆயிரத்திற்கு மேற்பட்ட கண்டுபிடிப்புக்களின் சொந்தக்காரருக்கு ஆரம்பத்தில் கிடைத்த சான்றிதழ் அது. ஆனால் எடிசனுக்கு தான் யார் என்பதும் தன்னால் எது முடியும் என்பதும் நன்றாகவே தெரிந்திருந்தது. எதையும் தேடியறியும் ஆர்வம் கொண்ட எடிசனிடம் எத்தனை தோல்விகள் வந்தாலும் தளராத மனோநிலை இருந்தது. அதுவே வெற்றிகளை அள்ளிக் குவித்தது.

எடிசன் மின்குமிழைக் கண்டுபிடிக்க 10,000 தடவைகளுக்கு மேல் தோல்வியடைந்தார். எவ்வளவுதான் தன்னம்பிக்கை இருந்தாலும் முதல் தோல்வி, இரண்டாவது, மூன்றாவது என்றாகும் போது நம்பிக்கை இழக்கத்தானே செய்யும். ஆனால் 10,000 அல்ல, 20,000 தடவைகள் தோற்றிருந்தாலும் அவர் நம்பிக்கையிழந்திருக்க மாட்டார். இதுதான் ஆரோக்கியமான மனோநிலை என்பது. இந்த மனோநிலைதான் உங்களிடம் வர வேண்டும்.

நீங்கள் ஏன் தோல்வியைக் கண்டு பயப்பட வேண்டும்? தோல்வியைத் துரத்தியடிக்கும் தைரியம் உங்களுக்கு வேண்டும். இளமை என்பது உள்ளத்தின் இளமையே ஆகும். எனவே, உள்ளத்தை இளமையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருங்கள்.

''மனிதன் தனது மனோநிலையை மாற்றிக் கொள்வதன் மூலம் தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முடியும் என்பது எமது தலைமுறையின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு ஆகும்'' என ஹாவர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வில்லியம் ஜேம்ஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

நேர் சிந்தனை (Positive Thinking)

நேர்சிந்தனை என்பது எதையும் நலவாகப் பார்ப்பது மட்டுமல்ல. எதிலும் உள்ள நலவை எடுத்துக் கொள்வது, அதனை நலவாக மாற்றுவது, அதிலிருந்து கற்றுக் கொள்வது. இதுதான் நேர் சிந்தனை. பலர் நேர் சிந்தனை என்றால் எந்த விதமான எதிர்விளைவு (உ-ம்: தோல்வி, இழப்பு) நிகழ்ந்தாலும் அவற்றில் நலவிருப்பதாக எண்ணுவதே நேர் சிந்தனை என நினைக்கின்றனர்.

உண்மையில் நேர் சிந்தனை என்பது ஒரு தன்னம்பிக்கைத் தத்துவமே. அதிலுள்ள நலவை எடுத்து அதிலிருந்து கற்றுக் கொண்டு வாழ்வில் முன்னேறுவதுதான் உண்மையான முன்னேற்றம், வெற்றி. எடிசன் தோல்விகளிலிருந்து மீண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்குமிழைக் கண்டுபிடித்த பின்னர் கூறிய வார்த்தை என்ன தெரியுமா? "எனக்கு ஒரு மின் குமிழ் எரியாமலிருப்பதற்கான 10,000 காரணங் கள் தெரியும்" என்பதுதான்.

நன்றாக கவனித்துப் பாருங்கள். எடிசன் மின்கு மிழ் எரியாதபோது அதனை வெறுமனே தோல் வியாக எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக, மின்கு மிழ் எரியாததற்கான காரணமாகத்தான் அதனை நினைத்தார். மேலும் அதிலிருந்து கற்றுக் கொண்டு மின்குமிழை தொடர்ந்து எரிய வைப்பதற்கான முயற்சிகளில் இறங்கினார். இதுதான் நேர் சிந்தனை.

எதிர்மறையான நிகழ்வுகளிலிருந்து நேரிடையான செயற்பாடுகளுக்கு

வாழ்வில் தோல்வி, இழப்பு, பின்னடைவு போன்ற பல எதிர்மறையான நிகழ்வுகளின்போது சொல்லப்படும் ஆறுதல் வார்த்தைதான் "எதற்கும் நம்பிக்கையிழக்கக்கூடாது; அதில் ஏதாவது நலவிருக்கலாம்" என்பது. ஆனால் ஆறுதலுக்காகக் கூறப்படும் அந்த வார்த்தைகளில் ஆறுதலைத் தவிர வேறேதுமில்லை என்பதுதான் உண்மை.

இலக்கு நோக்கிய பயணத்தில் தோல்வி, இழப்பு, பின்னடைவு என்பன தற்காலிகத் தடைகள்தான். அவற்றைத் தாண்டியே நாம் இலக்கு நோக்கிப் பயணிக்க வேண்டும். அவ்வாறு இலக்கு நோக்கிப் பயணிக்கும்போதே எம்மால் குறித்த இலக்கை அடையக் கூடியதாக இருக்கும். எனவே, இலக்கு நோக்கிய பயணத்தில் எதிர்ப்படும் அத்தகைய தடைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில், அத்தகைய தோல்விகளில்தான் வெற்றிக்கான காரணிகளும் ரகசியங்களும் மறைந்திருக்கின்றன.

எதிர்மறை சிந்தனை (Negative Thinking)

ஒரு கோழிக்கூட்டில் பருந்தின் முட்டை வைக்கப்பட்டது. அது பொறிந்தது. சின்னப் பருந்து கோழிகளுடனேயே வளர்ந்தது. காலப்போக்கில் அது தானும் ஒரு கோழி என்றே எண்ணியது. கோழிகளைப் போல் கொக்கரித்தது. கிடைத்த வற்றைக் கொத்தித் தின்றது.

ஒருநாள் வானில் பருந்து ஒன்று பறப்பதைப் பார்த்து அந்தப் பறவையின் பெயர் என்ன? என்று கேட்டது. "அது பருந்து, கம்பீரமான வலிமையான பறவை. நாங்களோ சாதாரண கோழிகள். வலிமை குன்றியவர்கள்" என கோழி ஒன்று பதிலளித்தது. அதுவே உண்மை என்றெண்ணிய பருந்தும் அவற் றுடனே வாழ்ந்து சிறிது காலத்தில் இறந்து போனது.

எத்தகைய அபார ஆற்றல்கள் இருந்தும் தன்னை யாரென்று அறியாததாலும் தன்னைக் கோழி என் றும் வலிமை குன்றிய பறவை என்றும் எண்ணிய தாலும் அதனால் பருந்தைப் போல் சாதிக்க முடிய வில்லை. எனவே, நீங்கள் எத்தகைய திறமைக ளைப் பெற்றிருந்தாலும் உங்களால் முடியாது என்று எண்ணும்போது அது உங்களால் இயலாததா கவே போகின்றது.

நாம் எத்தகைய திறமைகள், ஆற்றல்கள் உள்ள வர்களாக இருந்தும் எம்மால் முடியாது என எதிர்மறை சிந்தனையுடன் நடந்து கொண்டிருந் தால் எம்மால் அது முடியாததாகியே விடுகிறது. எனவே, உங்கள் உள்மனதிற்கு சக்தி கொடுங்கள். உங்களால் முடியும், சாதித்தே தீருவேன் என்ற தன்னம்பிக்கை தரும் சொற்களைப் பயன்படுத் துங்கள். உங்களைச் சுற்றி உள்ளவர்களின் பாராட்டு வார்த்தைகள் உங்களை ஊக்கப்படுத்தும் அதே வேளை, அவர்களின் அவநம்பிக்கை வார்த்தைகள் உங்களைப் பலமிழக்கச் செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வில் நீங்கள் எப்போதும் ஆரோக் கியமான மனோநிலையில் இருக்க வேண்டும். எத்த கைய தடைகள், தோல்விகள், இழப்புக்கள் வந்தா லும் தன்னம்பிக்கையோடு செயற்பட வேண்டும். இன்று நாம் காணும் ஹொன்டா ரக வாகனங்களின் நிறுவனரான ஹொன்டா புதிதாக கார்களுக்கான ஒரு உபகரணத்தைக் கண்டுபிடித்து அதனைத் தயாரிக்கும் உரிமையை டொயோட்டா கம்பனி யிடமிருந்து பெற்று தொழிற்சாலையைக் கட்ட ஆரம்பிக்கும்போது 2ம் உலக யுத்தம் ஆரம்பமாகி தொழிற்சாலை நிர்மூலமானது. மீண்டும் கடன் பட்டு தொழிற்சாலை கட்ட ஆரம்பிக்கும்போது அதுவும் தோல்வியில் முடிந்தது. இவற்றையெல் லாம் தாண்டித்தான் இன்று ஹொன்டா கம்பனி தலைநிமிர்ந்து நிற்கிறது.

எனவே, எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொள்ளும் மனோ தைரியத்துடன் ஆரோக்கியமான மனோநிலையுடன் இருங்கள். வெற்றி உங்களை வாழ்த்தி வரவேற்கும். மனோ நிலை என்பது முக்கியமானது. நீங்கள் வெற்றிய டைகின்ற சந்தர்ப்பத்தைவிட தோல்வியடை கின்ற சந்தர்ப்பங்களில் அது மிக முக்கியமானதா கின்றது.

உங்கள் கல்வி வாழ்வில் நீங்கள் சந்திக்கின்ற சிறிய சிறிய தோல்விகள், தற்காலிகப் பின்னடை வுகள், சாதாரண இழப்புகள் என்பவற்றைக் கண்டு நம்பிக்கையிழந்து விடாதீர்கள். தன்னம்பிக்கைக்கு முன்னால் எல்லாமே தவிடுபொடியாகிவிடும். ஒவ்வொரு பின்னடைவும் உங்களுக்கு ஒவ்வொரு புதிய பாடத்தைப் படித்துத் தர வேண்டும். அவற்றிலிருந்து நீங்கள் கற்று முன்னேற்றத்திற்கான பாதையை வரைந்து முன்னேறுங்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

தனிப் பாடற்றிரட்டு

- இலக்கிய வானில் 'தனிப் பாடல் திரட்டு' என்னும் பெயரில் பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் சிலரது பாடல்கள் இலக்கியச் சுவையுடன், பொருட் செறிவுடன் மிளிர்வதைக் காண்கிறோம்.
- இப்பாடல்கள் யாவும் பாடியோரின் புலமைத்திறனைப் புலப்படுத்துவதாக, கற்றோர்க்கு இன்பம் பயப்பனவாக அமைந்துள்ளன.

மாணவர்களே! நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

→ ஆசிரியர் (புலவர்) பெயர் தெரிந்து கொள்ளுங்கள்.
→ சந்தி பிரித்து பாடலை வாசியுங்கள்.
→ அரும்பதங்களைத் தெரிந்து அர்த்தம் அறிந்து கொள்ளுங்கள்.
→ பாடலுக்குப் பொருள் கூற ஆயத்தமாகுங்கள்.
→ இலக்கியச் சுவையை உணருங்கள்.

உங்களுக்கான பாடல்கள்:

→ - "மோட்டெருமை வாவி புக..."
→ - "காரென்று பேர் படைத்தாய்..."
→ - "ஆழிவாய்ச்சத்தம் அடங்காதோ..."
→ - "நிலவாய் விளங்குதலால்..."
→ - "கல்லைத்தான் மண்ணைத்தான்..."
→ - "மஞ்சும் அஞ்சும் கை..."

கற்றலுக்குத் தயாரா...?

பாடல்:

மோட்டெருமை வாவி புக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால் சொரியும் வெண்ணெயே- நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையப்பனூர்

சந்தி பிரித்தலைக் கவனியுங்கள்.

→ முதலில் சேர்த்து சொல்லப்படும் சொற்களை இனங்காண்போம்.

i. மோட்டெருமை	ii. கன்றென்று	iii. வீட்டளவும்
iv. நெடுங்கதவு	v. மஞ்சலென்ற	vi. சடையப்பனூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. மோட்(டெ)ருமை ——— மோட்டு எருமை

ii. கன்(றெ)ன்று ——— கன்று என்று

iii. வீட்(ட)ளவும் ——— வீட்டு அளவும்

iv. நெடு(ங்)கதவு ——— நெடும் கதவு

v. மஞ்ச(லெ)ன்ற ——— மஞ்சல் என்ற

vi. சடையப்ப(னூ)ர் —— சடையப்பன் ஊர்

சந்தி பிரித்து எழுதுவோமா?

- மோட்டு எருமை வாவி புக முட்டு வரால் கன்று என்று வீட்டு அளவும் பால் சொரியும் வெண்ணையே - நாட்டில் அடையா நெடும் கதவு அஞ்சல் என்ற சொல்லும் உடையான் சடையப்பன் ஊர்.

அரும்பதங்கள் அறிவோம்

மோட்டு -	வலிமைமிக்க
வரால் -	வரால் மீன்
வெண்ணையே -	திருவெண்ணை நல்லூர்
அஞ்சல் -	அஞ்சாதே

PUBLIC LIBRARY
JAFFNA

இனி உரையை நோக்குவோம்.

நாட்டில்- இந்த தேசத்தில்

அடையா நெடுங்கதவு- எப்போதும் அடையாத பெரிய வாசலும்

அஞ்சல் என்ற சொல்லும்- (யாசகனைப் பார்த்து) பயப்படாதே என்று கூறும் இனிய மொழியும்

உடையான் சடையப்பன் ஊர்- உடைய சடையப்ப வள்ளல் தங்கும் பதியாகும்

மோட்டு எருமை- வலிமையுடைய எருமைகள்

வாவி புக- குளக்கரைகளில் (பொய்கைகளிற்) சென்றபோது

முட்டு வரால்- (அவற்றின் மடுவில்) தாக்கும் வரால் மீன்கள்

கன்று என்று- (அவற்றை) தம்முடைய கன்றுக் குட்டிகளென்று எண்ணி

வீட்டளவும் பால் சொரியும்- வீடு போய் சேரும் வரை (தன்னிருப்பிடம் சேரும் வரை) பாலை சிந்திக் கொண்டே செல்லும்

வெண்ணையே- திருவெண்ணை நல்லூராகும்.

இந்த நாட்டில் எப்போதும் அடையாத பெரிய வாயிலும் யாசகனைப் பார்த்து பயப்படாதே என்ற இனிய மொழியும் உடைய சடையப்ப வள்ளல் வாழும் பதியானது, வலிமைமிக்க எருமைகள் பொய்கைகளிற் செல்லும்போது அவற்றின் மடி மீது தாக்கிய வரால் மீன்களைத் தம் கன்றுகளென்று எண்ணி தம்மிருப்பிடம் செல்லும் வரையும் பாலை சிந்திக் கொண்டே செல்லும் திருவெண்ணெய் நல்லூராகும்

கவிச் சக்கரவர்த்தி கம்பரது "மோட்டெருமை..." பாடலில் சடையப்ப வள்ளல் எவ்வாறு புகழப்படுகிறார்?

கம்பர் சடையப்ப வள்ளலை தம் பாடல்கள் பலவற்றில் புகழ்ந்து பாடியுள்ளார். சடையப்ப வள்ளல் புலவர்களை ஆதரிக்கும் பண்பு மிக்கவர். இரவலர்க்கு இல்லை என்று கூறாது ஈயும் குணம் படைத்தவர். அவரது நாட்டு வளம் கூறுவதினூடாக சடையப்பர் புகழப்படுகிறார்..

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,11 தர மாணவர்களுக்கானது
விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப் (விஷேட பயிற்சி ஆசிரியர்- விஞ்ஞானம்)

உயிரியல்: அங்கிகளின் ஒழுங்கமைப்பு மட்டங்கள்

சுருக்கக் குறிப்புகள், வினா விடைகள்

கலம் (Cell)

- ★ அங்கிகளின் அடிப்படை ஆக்க அலகு கலமாகும்.
- ★ கலங்களைப் பற்றி ஆராய்ந்த ஷெல்டன், சுவான் ஆகியோர் கலக் கொள்கையை வெளியிட்டனர்.
- ★ கலக் கொள்கை: அங்கிகளின் கட்டமைப்பினதும் தொழிற்பாட்டினதும் அடிப்படை அலகு கலம் ஆகும்.

கலம் மிகச் சிறியது என்பதால் அதன் பகுதிகளை (கலப் புன்னங்கம்) நுணுக்குக் காட்டியின் மூலமே அவதானிக்கலாம். எனினும் முட்டைக் கலம், தாவர நார்க் கலம் என்பன வெறுங் கண்ணால் அவதானிக்க முடியுமானவை.

மிகப் பெரிய விலங்குக் கலம்: தீக்கோழி முட்டை

மிகப் பெரிய தாவரக் கலம் : தும்பு (நார்க்கலம்)

01. பின்வரும் கலப் புன்னங்களின் பெயர்களை யும் அவற்றின் தொழில்களையும் எழுதுக.

கலத்தின் பகுதி	பெயர்	ஆற்றப்படும் தொழிற்பாடு
		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02 தாவரக் கலம் ஒன்றில் காணப்படும் பின்வரும் இயல்புகளைக் கொண்ட கலத்தின் பகுதிகளை எழுதுக.

i. உயிரற்றது, பதார்த்தங்களைப் புகவிடக் கூடியது: ....

ii. உயிருள்ளது, பதார்த்தங்களைத் தேர்ந்து புகவிடச் செய்வது:..

iii. இரட்டை மென்சவ்வினால் சூழப்பட்டவை: ....

இழையம் (Tissue)

➤ தோற்றம், அமைப்பில் ஒத்திருப்பதுடன் குறித்த ஒரு தொழிலையோ அல்லது தொழில்களையோ நிறைவேற்றுவதற்காக சிறத்தல் அடைந்த கலங்களின் கூட்டம் இழையம் எனப்படும்.

இயல்புகள், தொழிற்பாடு	தாவர நிலையிழையம்

03. தாவரங்களில் காணப்படும் எளிய நிலையிழையங்களின் இயல்புகள், தொழிற்பாடுகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இதற்குப் பொருத்தமான எளிய நிலையிழையத்தைக் கண்டறிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

i. கலங்கள் உயிருள்ளவை, இலிக்னின் படிவுகள் காணப்படாது. கலங்களின் மூலைகள் தடித்துக் காணப்படும். ....

ii. கலங்கள் இறந்தவை. இலிக்னின் படிவுற்றதாக காணப்படுபவை. பொறிமுறைப் பலத்தை வழங்குபவை. ....

iii. கலங்கள் உயிருள்ளவை. பிரதானமாக ஒளித் தொகுப்பு செயற்பாட்டில் ஈடுபடுபவை. ....

04. தாவரங்களில் காணப்படும் சிக்கலான நிலையிழையமாகிய கடத்துமிழையம் ஒன்றின் குறுக்கு வெட்டு முகத் தோற்றம் கீழ்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



i. இங்கு A, B, C இனால் குறிப்பிடப்படும் கல வகைகளை எழுதுக.

A ....

B ....

C ....

ii. இங்கு குறிப்பிடப்பட்ட கடத்துமிழையத்தின் பெயரையும் அதன் தொழிலையும் எழுதுக.

i. கடத்துமிழையத்தின் பெயர்: ....

ii. தொழில்: ....

iii. இங்கு காட்டப்படாத தாவரங்களில் காணப்படும் இன்னொரு கடத்துமிழையத்தை எழுதி அதன் தொழிற்பாட்டையும் எழுதுக.

கடத்துமிழையம்: ....

தொழிற்பாடு: ....

தாவரங்களின் பிரியிழையங்கள்:

இவை உயிருள்ள கலங்கள், வியத்தமடையாதவை. கலத்திடைவெளி கொண்டவை. கலச்சுவர் செலுலோசினால் மட்டும் ஆனது. இவை வியத்தமடைவதால் நிலையிழையங்கள் தோன்றும்.

காணப்படும் இடங்கள்: அங்குர நுனி, வேர் நுனி, அரும்புகள், கலன் மாறிழையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மனித உடலில் பின்வரும் இடங்களில் காணப்படும் தசை வகையைக் குறிப்பிட்டு அதன் கட்டமைப்பு இயல்பு ஒன்றையும் தொழிற்பாட்டு இயல்பு ஒன்றையும் எழுதுக.

காணப்படும் இடம்	தசை வகை	கட்டமைப்பு இயல்பு	தொழிற்பாட்டு இயல்பு
இருதலைத் தசை,			
முத்தலைத் தசை			
இதயம்			
சிறுகுடல்,			
பெருங்குடல்			

குருதி இழையம்: கூறுகளும் தொழிற்பாடும்

குருதியின் கூறு	இயல்புகள்	தொழிற்பாடு
செங்குருதிச் சிறுதுணிக்கை (RBC)	கரு அற்றவை, செந்நிறமானவை, இரு புறம் உட்குழிவான வட்டத் தட்டுரு வானவை, ஈமோகுளோபின் கொண்டவை	வாயுவைக் கடத்தல்
வெண்குருதிச் சிறுதுணிக்கை (WBC)	குறித்த வடிவம் அற்றவை, கரு கொண்டவை	குருதியில் உள்ள பொருட்களை அழித்தல்
குருதிச் சிறுதட்டுகள் (Platelets)	குறித்த வடிவம் அற்றவை, கரு அற்றவை	குருதி உறைவில் பங்கெடுத்தல்
குருதித் திரவவிழையம்	பாயும் வடிவம் அற்றவை, பல்வேறு பதார்த் தங்கள் கரைந்த நிலையில் காணப்படும்	போசணைக் கூறுகள், கழிவுப் பொருட்கள், ஓமோன்கள் என் பவற்றைக் கடத்துதல்

06. மனிதனில் பின்வரும் தன்மையைக் கொண்ட இடங்களில் காணப்படும் மேலணி இழைய வகையினை எழுதுக.

i. பதார்த்தங்களை ஊடுபுகவிடும் இடங்கள் : ....

ii. தூசு துணிக்கைகளை அகற்றும் இடங்கள் : ....

iii. உராய்வைத் தாக்குப் பிடிக்கும் பகுதிகள் : ....

iv. இழுபடவல்ல, மீள்தகவுள்ள இடங்கள் : ....

07. பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காக எமது உடலில் காணப்படும் தொகுதிகளை எழுதுக.

i. தாங்குதல், அசைவு: ....

ii. இடப்பெயர்ச்சி: ....

iii. பதார்த்தங்களைக் கொண்டு செல்லல்: ....

iv. வாயுப் பரிமாற்றம்: ....

08. அங்கிகளின் உடலில் காணப்படும் ஒழுங்கமைப்பு மட்டங்களை முறையாக எழுதுக. ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஹர் ஸகரிய்யா

அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பய்யா

ஒரு நாட்டில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்வதென்பது ஒரு சோதனையல்ல; அது ஓர் அதிஷ்டம் என்ற கருத்தை பய்யா தனது நூல்களிலும் உரைகளிலும் முன்வைக்கின்றார். அதற்கு ஆதாரமாக பல நூற்றாண்டுகள் ஸ்பெய்னையும் இந்தியாவையும் ஆட்சி செய்தவர்கள் சிறுபான்மை முஸ்லிம்களே என்பதை தர்க்க ரீதியாக நிரூபிக்கும் ஆற்றல் அவரின் தனிப்பெரும் திறமையாகும்.

"**மனிதர்களை** மதித்து கண்ணியப்படுத்தி அவர்கள் மீது அன்பு கொள்வதென்பது சாதாரண விடயமல்ல. மனிதர்களுள் ஒரு சிலர் கண்ணியப்படுத்தப்பட வேண்டியவர்கள். மற்றும் சிலர் அன்பு பாராட்டத்தக்கவர்கள். இவ்விரு அந்தஸ்துகளையும் பெற்றுக் கொள்வதற்கு தகுந்த மனிதர்கள் இந்த நூற்றாண்டில் ஒரு சிலரே வாழ்கின்றனர். அந்த வகையில் எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய ஒரு மனிதரே அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பய்யா ஆவார்."

இக்கூற்றின் சொந்தக்காரர் யார் தெரியுமா? 21ம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதிவும் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் பேரவையின் தலைவருமான யூசுப் அல்கர்ளாவி அவர்கள்தான். அவர் குறிப்பிட்டதைப் போன்று இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் சீர்திருத்தவாதியாகவும் தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவராகவும் கருதப்படும் ஒருவரே ஷேக் பய்யா அவர்கள்.

ஷேக் பய்யா 1935ல் மொரிதானியாவின் தம்திகா எனும் சிற்றூரில் பிறந்தார். ஒரு மிகப் பெரும் அறிஞரின் உருவாக்கத்தில் அவரது குடும்ப சூழலுக்கு அதிக பங்கிருக்கிறது என்பதை நிரூபிக்கும் வகையிலேயே அவரது இளமைச் சூழல் காணப்பட்டது. ஷெய்க் பய்யா மிகப் பெரும் பல்கலைக் கழகங்களில் கற்று வெளியேறிய ஒருவரல்ல. அவரது கிராம சூழலே அவருக்கு மிகச் சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கியது.

அவரது முதல் ஆசான் ஷெய்க் மஹ்பூழ் என்றழைக்கப் பட்ட அவரின் தந்தையாவார். முஹம்மத் ஸாலிம் இப்னு ஷீன், ஷெய்க் பய்யா இப்னு ஸாலிக் போன்றோரே அவரின் ஆரம்ப கால ஆசிரியர்கள். நவீன சிவில் சட்டங்களையும் இஸ்லாமிய சட்டக் கலையையும் மிக விரிவாகக் கற்ற ஷெய்க் பய்யா தனது அறிவு முதிர்ச்சியின் காரணமாக தனது இளம் வயதிலேயே பல உயர் அரச பதவிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் அமர்த்தப்பட்டார். அவர் வகித்த பதவிகளுள் சில:

- நீதியமைச்சில் ஷரீஆத் துறைத் தலைவர்
- மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உப தலைவர்
- உயர் நீதிமன்றத்தின் உப தலைவர்
- சமய மேம்பாட்டு அமைச்சர்
- ஆரம்பக் கல்வி மற்றும் மார்க்க விவகாரங்களுக்கான அமைச்சர்
- நீதியமைச்சர்
- மனித வள மேம்பாட்டு அமைச்சர்
- மொரித்தானியாவில் 1970 - 1978 வரையான காலப் பகுதியில் ஆளும் கட்சியாக இருந்த மொரித்தானிய மக்கள் கட்சியின் நிரந்தர செயலாளர்
- மன்னார் அப்துல் அஸீஸ் பல்கலைக்கழகத்தின் தற்போதைய முதுநிலை விரிவுரையாளர்

இஸ்லாமிய உலகில் நடைபெறும் சர்வதேச மாநாடுகளில் ஷெய்க் அவர்கள் முக்கிய பிரமுகராக கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிப்பார். அவருடனான தனது முதல் அனுபவத்தை தாஹா ஜாபிர் அலவானி எனும் இஸ்லாமிய அறிஞர் இவ்வாறு பகிர்ந்து கொள்கிறார்:

"ஜித்தாவில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாடுகள் அமைப்பின் கீழ் இயங்கும் இஸ்லாமிய சட்டங்களுக்கான சர்வதேச அமைப்பின் ஒன்றுகூடல் ஒன்றில் ஷெய்க் பய்யாவை காணும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சபையிலேயே மிகப் பெரும் அறிஞராக இருந்தவர் ஷெய்க் அவர்கள்தான். அவரைப் போன்ற அறிவும் ஆதாரங்களை முன்வைக்கும் திறனும் தான் முன்வைத்த கருத்தின் பக்கம் சபையோரின் கவனத்தை ஈர்க்கும் ஆற்றலும் அவரது சிறப்பை எடுத்துக் காட்ட போதிய சான்றுகளாகும். அந்த சபையை அவர்தான் வழி நடத்திச் செல்கின்றாரோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டு விட்டது. இந்த நூற்றாண்டின் மின்னும் தாரகைகளில் ஒருவரே ஷெய்க் பய்யா என்பதில் சந்தேகமே இல்லை.

மற்றொருமுறை நான் அவரை அமெரிக்காவில் சந்தித்தபோது அவர் மீது எனக்கிருந்த கண்ணியம் மென்மேலும் கூடி அன்பாக மாறியது. மார்க்கத்தையும் நடைமுறை உலகையும் மிகச் சரியாகப் புரிந்து கொண்டு அவற்றை நடைமுறைக்கேற்ப இலகுபடுத்திக் கொடுக்கும் நடுநிலை சிந்தனையாளர்களுள் ஷெய்க் பய்யா முக்கிய இடத்தைப் பெறுகிறார்."

ஷெய்க் பய்யா பல்வேறு தலைப்புகளில் பல நூல்களை எழுதியுள்ளார். மனித உரிமைகள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம், மாற்று மதத்தினருடனான சகவாழ்வு குறித்த இஸ்லாமிய சிந்தனை, இஸ்லாமிய பொருளியல் கோட்பாடுகள், இஸ்லாமிய அடிப்படைவாதம் போன்ற சமகால உலகுடன் தொடர்புபட்ட சிந்தனைகள் பல்வேறு துறைகளிலும் ஷெய்க் பல நூல்களை இஸ்லாமிய உலகிற்கு தந்துள்ளார்.

ஷெய்க் அவர்களின் பிரதான துறை சிறுபான்மை சமூகத்தில் இஸ்லாமிய சட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பதாகும். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் பல அறிஞர்கள் தமக்கான பிக்ஹின் வழிகாட்டியாகவும் சிறுபான்மை சட்டங்களுக்கான மூலாதாரமாகவும் ஷெய்க் பய்யாவின் கருத்துக்களையே எடுத்துக் கொள்கின்றனர்.

ஒரு நாட்டில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்வதென்பது ஒரு சோதனையல்ல; அது ஓர் அதிஷ்டம் என்ற கருத்தை பய்யா தனது நூல்களிலும் உரைகளிலும் முன்வைக்கின்றார். அதற்கு ஆதாரமாக பல நூற்றாண்டுகள் ஸ்பெய்னையும் இந்தியாவையும் ஆட்சி செய்தவர்கள் சிறுபான்மை முஸ்லிம்களே என்பதை தர்க்க ரீதியாக நிரூபிக்கும் ஆற்றல் அவரின் தனிப்பெரும் திறமையாகும்.

2009ம் ஆண்டு ஷெய்க் பய்யா உலகின் தலைசிறந்த 50 அறிஞர்களுள் ஒருவராக இனங்காணப்பட்டார். சர்வதேச ரீதியாக பல விருதுகளைப் பெற்றுள்ள அவர் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியம், இஸ்லாமிய சட்ட அமைப்பு, ஆய்வுகளுக்கும் மார்க்கத் தீர்ப்புக்குமான ஐரோப்பிய அமைப்பு, சர்வதேச இஸ்லாமிய நலன்புரி அமைப்பு - குவைத், அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா என்பவற்றுள் காணப்படும் அறிவியல் அற்புதங்களை ஆய்வு செய்யும் சர்வதேச அமைப்பு போன்ற பல சர்வதேச இஸ்லாமிய அமைப்புக்களின் ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவராகவும் பிரதான உறுப்பினர்களுள் ஒருவராகவும் உள்ளார்.

பிறக்கும்போதே யாரும் சாதனையாளராகப் பிறப்பதில்லை. இடைவிடாத முயற்சியும் பயிற்சியும்தான் ஒருவரைச் சாதனையாளராக மாற்றுகின்றது. முயற்சியும் பயிற்சியும் தொடர்ச்சியாக இருந்தால் சாதாரண மனிதனும் சாதனையாளர் ஆகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

மறுமையை மறவாதே

இப்பாரினிலே
புகழ் தேடி அலைந்த - நீ
ஒருநொடியேனும் மரணத்தை
நினைத்தாயோ?

மறுமைக்காக வாழ்ந்த நீ
ஓடுகிறாயே உலகின் பின்!
மறுமையில் கேள்விகணக்கை
மறந்தாயோ?

மஹ்ஷர் மைதானம்
மீஸான் தராசு
மறுமையின் காட்சிகளை
மறந்து விட்டாயா!

கல்லறையை மறந்து விட்டு நீ
கல்மனதோடு காலம்
கடத்துகிறாய்
என்றென்றும் மறவாதே
மறுமையை

ஆமிலா ஹனான்
தரம்- 10, ஜெய்லானி தே.பா, பலாங்கொட

விடியலின் வண்ணக் கோலங்கள்

விடியற் காலையில்
சேவல்களின் கூவல்கள்
கிழக்கு வானில்
சூரியனின் உதயம்
கும்மென்று மணம் பரப்பும்
வண்ணப் பூக்களின் வாசம்
இலைகளின் மேல் முத்து முத்தாய்
பனித் துளிகளின் ஈரம்
காதிற்கு இனிமை தரும்
பறவைகளின் கீச்சுக் குரல்
எத்தனை எத்தனை இன்பங்கள்
வானிலும் பூமியிலும்
விடியலின் வண்ணக் கோலங்கள்

எம்.எச். சதக்கத், தரம்- 10
அக்/ பொ. மத்திய கல்லூரி, பொத்துவில்

ஏன் பறிகொடுத்தாய்

உள்ளத்தாலோ உடலாலோ
பணத்தாலோ பதவியாலோ
வாங்க முடியுமா நீ பறிகொடுத்ததை

இஸ்லாத்தை உன் உள்ளத்தில்
ஊற்றெடுக்க மறுத்துவிட்டு
பண்பான பழக்கங்களை உன்னில்
ஊட்டி விட மறந்து விட்டு
இன்று ஏனோ பறிகொடுத்த
நிலையில் தவிக்கின்றாய்

அன்னை அரவணைப்பில் இருந்து
பழக்கம் உன்னை விட்டு இன்னும்
நீங்காமல் உலகத்துள் சுருண்டு
விட்டாய் உன் இஸ்லாமிய
வாழ்க்கையை
பறிகொடுத்து விட்டு

காலத்தை பறிகொடுத்து
கவலைகளாய்
மாற்றி விட்டாய்
பந்தங்களை பறிகொடுத்து
தனி மரமாய்
தவிக்கின்றாய்

உன் சொந்தங்கள் சோகங்களாய்
மண்ணறையில் தவிக்கின்றோம்
ஏதேதோ பறிகொடுத்து விட்டாய்
மறுமையில் சுவனம் எனும் ஒன்றை
பறிகொடுத்து விடாதே

எம்.எப். மபாஸா மஹீஸ்,
ஓட்டமாவடி - 01

அகரத்துக்கோர் வாழ்த்து

அன்பை அள்ளி வார்த்திடுவாள் தாய்!
அறிவை அள்ளி வளர்க்கிறாய் அகரமே நீ!

தாயிடம் இருந்து நாம் பெறுவது அன்பு!
உன்னிடம் இருந்து நாம் பெறுவது அறிவு!

தவழ்ந்தோம் அன்னை மடியில் நாம்!
தவழுகின்றாய் மாதா மாதம் மாணவர் கையில் நீ!

நல்லறிவும் நுண்ணறிவும் வழங்கிடுவாய் எமக்கு!
நல் வாழ்த்தும் நல்வாழ்வும் தந்திடுவோம் உனக்கு!

உன்னை வாழ்த்திடுவோம் நாமே!
உன்னால் பல்லறிவும் பெற்றிடுவோம் நாமே!

எப்போதும் நீ எங்கள் கைகளில் தவழ வேண்டும்!
என்றென்றும் நீ வாழ்ந்திட வேண்டும்!

பாத்திமா ஹனா அறபா
தரம்- 8, பொலன்னறுவை மு.ம.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் I **நேரம் 45 நிமிடம்**

பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான விடைக்குக் கோடிடுக.



01. i. கேட்டல் குறைபாடு
ii. பார்வைக் குறைபாடு
iii. பேச்சுக் குறைபாடு



02. i. அதிக செலவு கூடிய பயணம்
ii. செலவு கூடிய பயணம்
iii. செலவில்லா அல்லது செலவு குறைந்த பயணம்



03. i. சமைத்துச் சாப்பிட மட்டும்
ii. பச்சையாகச் சாப்பிட மட்டும்
iii. சமைத்தும் பச்சையாகவும் சாப்பிட மட்டும்



04. i. பாய்தலும் ஓடுதலும்
ii. பாதுகாப்பும் மோப்ப சக்தியும்
iii. மோப்ப சக்தியும் நீந்துதலும்

முதல் சொல்லுக்குப் பொருத்தமான விடைக்குக் கோடிடுக.

05. கொடி (தேங்காய், அவரை, மிளகாய்)
06. குரக்கன் (கிழங்கு, கீரை, தானியம்)
07. முட்டை (விலங்கு, தாவரம், தாவர விலங்கு)
08. முக்கனி (தோடை, திராட்சை, பலா)
09. கல் (கற்கள், கட்கல், கற்க்கல்)
10. நெருப்பு (ஆ, மா, தீ)

படத்துடன் கூடிய கருத்து நிறைந்த சொற் கூட்டத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.



11. i. தகவல், அறிவியல், இணையம்
ii. செய்தி, உபகரணம், கடை
iii. அறிவு, பாடசாலை, விலை குறைவு

12. i. இளநீர், ஓலை, பக்க வேர்
ii. இளநீர், ஆணிவேர், ஓலை
iii. ஓலை, இளநீர், நாருறு வேர்

13. i. கேட்டல், பார்த்தல், தகவல்
ii. செய்தி, பார்த்தல், தகவல்
iii. கேட்டல், தகவல், மின்சாரம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

14. பின்வரும் விலங்குக் கூட்டங்களில் முலையூட்டிகளாக அமையும் கூட்டம் எது?
i. ஆமை, குரங்கு, அணில்
ii. கீரிப்பிள்ளை, பல்லி, எலி
iii. குரங்கு, மனிதன், யானை

15. பின்வரும் பிராணிகள் கூட்டங்களில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் கூட்டம் எது?
i. ஆமை, ஓணான், வெளவால்
ii. பல்லி, முதலை, ஆமை
iii. பாம்பு, அணில், உடும்பு

16. கூட்டிலுள்ள எண்களைக் கிடையாகவும் நிலைக்குத்தாகவும் கூட்டும்போது வரும் விடை 18 எனின் B என்னும் கூட்டிற்குள் வரவேண்டிய எண்களைக் காட்டும் கூடு எது?

3	6	4	5
5	B	B	3
4	B	B	6
6	5	3	4

i.

3	5
6	4

ii.

4	6
3	5

iii.

3	4
5	6

17. நிலாம் மாதம் ஒன்றில் ரூபா 500 வங்கியில் சேமிப்பு செய்கிறான். அவன் வருடம் ஒன்றுக்கு எவ்வளவு பணம் சேமிப்பு செய்து இருப்பான்?
i. ரூபா 1500 ii. ரூபா 6000 iii. ரூபா 3000

18. டிஜிட்டல் இலக்கக் கடிகாரம் ஒன்றில் பின்வரும் முறையில் சரியாக நேரத்தைக் காட்டும் கடிகாரம் எது?
i. 01:60 ii. 10:015 iii. 10:10

19. எண்கோலத்திற்கு ஏற்ப அடுத்துவரும் எண்கள் யாவை? 16, 24, 20, 27, 24, ..., ...
i. 30, 28 ii. 28, 30 iii. 25, 29

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

நீண்ட அலகு நாரையே
இறக்கை விரித்துப் பறக்கிறாய்
குளத்தைக் கண்டு நிற்கிறாய்
இரையைக் காணத் துடிக்கிறாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. இப்பாடலில் குறிப்பிடப்பட்ட பறவை
i. கொக்கு ii. கழுகு iii. நாரை

21. அலகு என்பது
i. வடிவு ii. சொண்டு iii. மீன்

22. இரையைக் காணத் துடிக்கிறாய் என்பதில் செயப்படு பொருள்
i. இரை ii. நாரை iii. துடிக்கிறாய்

23. பாடலில் இடம்பெற்ற அடைமொழி
i. நாரை ii. நீண்ட iii. குளம்

24. பாடலில் இடம்பெற்ற இடப்பெயர்
i. இரை ii. நாரை iii. குளம்

பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான விடைக்கு கோடிடுக.

25. கரடி — கனைக்கும்
மாமிச உண்ணி
மிருகக் காட்சிசாலையில் வாழும்

26. சூரியன் — இயற்கை முதல்
செயற்கை முதல்
இரவு

27. பட்டம் — வெப்பம்
தட்பம்
காற்று

28. தொடர்பாடல் என்பது எதைக் குறிக்கும்?
i. பாட்டு, கதை, புத்தகம்
ii. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி
iii. கணினி, தொலைபேசி, பாட்டு

29. கண்களைத் திறந்து கொண்டு தூங்கும் பிராணிகள்
i. முதலை, பாம்பு, மீன்
ii. ஆமை, முதலை, ஓணான்
iii. கிளி, புறா, மாடு

30. நாம் உணவுக்காக இலைகளைப் பெறும் கொடிவகை எது?
i. மரவள்ளி ii. குறிஞ்சான் iii. பாகல்

31. 4623 எனும் எண்ணில் 6 ஆல் காட்டப்படும் இலக்கத்திற்குரிய பெறுமானம் யாது?
i. 6000 ii. 60 iii. 600

32. ஒன்றுகள் இடத்தில் ஐந்தும், நூறுகள் உள்ள இடத்தில் எட்டும் உள்ள எண்.
i. 5823 ii. 2835 iii. 5285

33. 2099 இற்குப் பின் உள்ள எண் யாது?
i. 3000 ii. 3100 iii. 2100

34. பொது வித்தியாசம் 10 ஆகவுள்ள எண்கோலம் ஒன்று.
i. 28, 38, 48, 59 ii. 9, 19, 29, 38
iii. 7, 17, 27, 37

35. இலையும் காயும் உணவுக்கு எடுக்கும் தாவரம்.
i. வெண்டி ii. முருங்கை iii. லீக்ஸ்

36. பூனை தனது குட்டிகளை தூக்கிச் செல்வது
i. வயிற்றுப் பகுதியின் மூலம்
ii. கழுத்து மேல்பகுதி மூலம்
iii. காதுகளினால்

37. ரூபா 180.00 இன் 1/4 இன் பெறுமானம் எவ்வளவு?
i. ரூபா 42.00 ii. ரூபா 42.50 iii. ரூபா 42.25

38. கமலுக்குப் புறா ஒன்று இல்லை. எனினும் ஒரு நாயும் பூனையும் உண்டு. கலாமுக்கு ஒரு நாய் உண்டு. எனினும் பூனையும் கிளியும் இல்லை. அனீஸுக்கு ஒரு நாயும் ஒரு கிளியும் உண்டு. எனினும் பூனையொன்று இல்லை. அதன்படி மூவரிடமும் உள்ள பிராணி.
i. நாய் ii. பூனை iii. கிளி

39. 
இவ்வுருவில் காணப்படுகின்ற முக்கோணிகளின் எண்ணிக்கை.
i. 8 ii. 12 iii. முக்கோணிகள் இல்லை

40. இவ்வுருவின்படி கடலை உண்பதற்கு விருப்பமுடையோரின் மொத்த எண்ணிக்கை.


i. 15 ii. 20 iii. 25

41. கீழேதரப்பட்டுள்ள எண்களில் மிகச்சிறிய எண் எது?
i. ஒன்பதாயிரத்து தொண்ணூற்று ஆறு
ii. ஒன்பதாயிரத்து நூற்று ஒன்பது
iii. ஒன்பதாயிரத்து ஒன்பது
iv. ஒன்பதாயிரத்து இருநூறு

42 எலுமிச்சைப்பழம் 1kg வாங்கியபோது அதில் 20 காய்கள் காணப்பட்டன எனின், ஒரு எலுமிச்சைப் பழத்தின் சராசரி நிறை.
i. 100g ii. 50g iii. 25g

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் II

நேரம் 1 மணி 15 நிமிடம்

01. விடுபட்ட துண்டைக் கண்டறிந்து அதன் கீழ் கோடிடுக.

தோப்பூர்		அவ்வூரில் உள்ள ஆழமான
		குளிக்கச் சென்றனர். யாருமே குளிக்கச்
செல்லாத		பெரிய முதலை ஒன்று வாழ்ந்து

வந்ததை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

I.

	கடலில்
கிராமத்தில்	
	அவ்வாற்றில்

II.

	மாணவர்கள்
குளத்திற்கு	
	அக்குளத்தில்

III.

	வாசிகள்
கிணற்றில்	
	குளத்தில்

02.

	இல்லாத கல்வி எந்தப் பிரயோசனமும்	
அற்றது. இதனை		கருத்திற் கொண்டு
	போது வெற்றி எம்மைத் தேடி வருவது நிச்சயம்.	

I.

பணம்	
	மாணவர்கள்
தொழில் செய்யும்	

II.

தொழில்	
	நண்பர்கள்
செயற்படும்	

III.

ஒழுக்கம்	
	யாவரும்
செயற்படும்	



03. சீனியின் நிறை எவ்வளவாக இருக்கலாம்?

i. 3kg ii. 4kg iii. 1kg

04. ராணியின் அம்மாவின் வயது 40 ஆகும். ராணியின் வயது அம்மாவின் வயதின் 1/4 பகுதியாகும். ராணியின் வயது

i. 10 வயது ii. 30 வயது iii. 20 வயது

குறியீடுகளுக்குப் பொருத்தமான வசனத்தைத் தெரிவு செய்க.

05



i. நேரே செல்ல தடை
ii. சிறுவர்கள் கடக்கும் இடம்
iii. நேரே செல்க

06.



i. மோட்டார் வாகனங்கள் செல்லலாம்
ii. மோட்டார் வாகனங்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது
iii. கார், மோட்டார் சைக்கிள்கள் மட்டும் செல்லலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.



i. பாதை மூடப்பட்டுள்ளது
ii. இந்தப் பக்கம் செல்க
iii. வாகனம் செல்லத் தடை

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட சொற்களுக்கு ஒத்த சொற்களை எழுதுக.

08. இலங்கை **எழில்** கொஞ்சும் நாடாகும்.........
09. சிலர் **மதி** கெட்டு அலைகின்றனர் ....
10. **கருணை** இல்லத்தில் சிறுவர்கள் வாழ்ந்தனர் ....
11. **கங்கையில்** நீராடியவுன் மூழ்கினான் ....
12. அன்னை தெரேசா **தொண்டுகள்** பல செய்தார் ....

பின்வரும் சிங்கள வாக்கியங்களுக்கான கருத்தை எழுதுக.

13. பல்லா புரனவா ....
14. குருல்லோ இகிலனவா ....

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கமைக்குக.

15. வா - சோறும் - தின்ன - பாலுஞ் ....
16. மேல் - வா - ஏறி - மலை ....

பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.

17. Pineapple ....
18. Sun ....
19. பின்வரும் வாக்கியங்களில் எழுவாய்க்கு கோடிடுக.
i. தமீம் சமீமை விட இளையவன்.
ii. வேடனை புலி துரத்தியது.
iii. வேகமாக ஓடியது ஒட்டகச் சிவிங்கி

பின்வரும் படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.



20. நாடாக்கள் B+A யின் நீளம் ....cm
21. நாடாக்கள் C+B யின் நீளம் ....cm
22. நாடாக்கள் A+C+B யின் நீளம் ....cm

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

23. தாவரங்களில் இரவைக் கழிக்கும் பிராணி
i. மயில் ii. புறா iii. யானை

24. பௌத்தர்கள் அவர்களுடைய வணக்கஸ் தலங்களுக்கு வழிபடக் கொண்டு செல்லும் பூ எது?
i. நீல அல்லி ii. செவ்வரத்தை
iii. சூரியகாந்தி

25. பின்வரும் பிராணிகளில் தாவர உண்ணி எது?
i. தேன் குருவி ii. காகம் iii. பூனை

26. கூரான பற்களும் கூரான நகங்களும் கொண்ட பிராணிகள் யாவை?
i. புலி, சிங்கம், மாடு ii. நாய், பூனை, ஆடு
iii. பூனை, சிங்கம், புலி

27. விஷேடமாக கூடுகட்டி வாழும் பிராணிகள்
i. தேனீ, காகம் ii. புறா, குளவி
iii. குளவி, தேனீ

28. சிறு பூச்சிகள், தானியங்கள் ஆகிய இரண்டையும் உண்ணும் பிராணியாக அமையாதது எது?
i. செண்பகம் ii. கொக்கு iii. தாரா

29. தனது உடல் நிறையைப் போல் மபல மடங்கு பாரத்தை தூக்கிச் செல்லக்கூடிய பிராணி எது?
i. எறும்பு ii. காகம் iii. புறா

30. மனிதனுக்குக் கேளாத மிகச் சிறிய ஒலியையும் கேட்கும் ஆற்றலுடையது
i. பூனை ii. நாய் iii. வௌவால்

சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் இடுக.

31. குளவி, எறும்பு, தேனீ போன்ற பிராணிகள் கூட்டமாக வாழும். ( )
32. புத்தக அலுமாரியிலுள்ள புத்தகங்களிடையே இராமபாணம் காணப்படும். ( )
33. காட்டு விலங்குகளை வேட்டையாட முடியாது. ( )
34. குற்றவாளி, போதைப்பொருள், வெடிகுண்டு என்பவற்றைக் கண்டுபிடிக்க நாயின் மோப்பச் சக்தி உதவும். ( )
35. சமுதாயமாக வாழும் பிராணி அல்லாதது தேனீ. ( )

தரப்பட்டுள்ள பழங்களின் விலைகளின்படி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.



மாம்பழம் ரூபா 22.50



பப்பாசிப் பழம் ரூபா 55.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோடம்பழம் ரூபா 53.00



வாழைப் பழம் ரூபா 10.50

36. மாம்பழம் ஒன்றும் இரண்டு தோடம்பழங்களும் வாங்க எவ்வளவு பணம் தேவை? ....

37. பப்பாசிப் பழம் ஒன்றும் இரண்டு மாம்பழங்களும் வாங்க எவ்வளவு பணம் தேவை? .....

38. இரண்டு வாழைப் பழங்களும் ஒரு தோடம் பழமும் வாங்க எவ்வளவு பணம் தேவை? ....

39. நான்கு வகையான பழங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழங்கள் வீதம் வாங்க தேவைப்படும் பணம் யாது? ....

40. ஒரு தடவையில் அதிகம் முட்டையிடும் பிராணி
i. கோழி ii. வாத்து iii. ஆமை

41. மயிர்க்கொட்டி உருமாற்றம் அடைந்து உருவாகும் பிராணி.
i. கரப்பான் பூச்சி ii. வெட்டுக்கிளி
iii. வண்ணத்துப் பூச்சி

42. எமது நாட்டு தேசியக் கொடியில் காணப்படும் அம்சங்களில் ஒன்று.
i. தர்மச் சக்கரம் ii. அரச இலைகள்
iii. சூரியன், சந்திரன்

43. மழைக்காலம் நெருங்கும்போது நிலத்திலிருந்து வெளியேறும் பிராணி.
i. மின்மினிப் பூச்சி ii. புற்றீசல் iii. சிலந்தி

சொற்கூட்டங்களுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிவு செய்க.

44. அமைதி, அறிவு, புத்தகம், மேசை, வாசகர்கள்

i. கோயில் ii. வீடு iii. நூலகம்

45. மரங்கள், பிராணிகள், வேடன், நிழல்

i. கிராமம் ii. காடு iii. மலைநாடு

46. அமைதி, தியானம், வழிபாடு. பயபக்தி

i. வணக்கஸ்தலம் ii. பாடசாலை iii. கடை

தரப்பட்டுள்ள தரவுகளை கிரகித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வயலில் உள்ள கொக்குகளின் எண்ணிக்கை 16 ஆகும். கிளிகளின் எண்ணிக்கை மைனாக்களின் எண்ணிக்கையை விட 6 அதிகமாகும். மைனாக்கள் நெற்குருவிகளின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். நெற்குருவிகள் கொக்குகளைவிட மூன்று மடங்காகும்.

47. மைனாக்களின் எண்ணிக்கை யாது? ....

48. வயலில் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை யாது? ....

49. வயலில்உள்ளநெற்குருவிகளின்எண்ணிக்கை......

50. வயலில் காணப்பட்ட கொக்குகளின் எண்ணிக்கை ....

51. மணமற்ற இலைகளைக் கொண்ட தாவரம் எது?
i. கறிவேப்பிலை ii. துளசி iii. வல்லாரை

52. மஞ்சாடி விதைகளைக் கொண்டு விளையாடப்படும் கிராமிய விளையாட்டு
i. பல்லாங்குழி ii. சடுகுடு
iii. தாயம் போடுதல்

53. பின்வருவனவற்றில் தொற்றுநோய் எது?
i. கண்நோய் ii. தலைவலி iii. கண்டமாலை

படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடை தருக. (பெயர் எழுத்தின் எழுதப்பட வேண்டும்.)



54. விறகு வெட்டப் பயன்படுவது ....

55. வெளிச்சத்தைப் பெற உபயோகிக்கப்படுவது

56. சீனி வாங்கும்போது முதலாளி பயன்படுத்துவது..

57. சூரியனைச் சுற்றி வருவன ....

58. இது கசக்கும் ....

'நான் பார்த்து இரசித்த மிருகக்காட்சி சாலை' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொன்றும் நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம். எழுவாய், பயனிலை போன்றன பேணப்பட்டிருத்தல் வேண்டும்.

59. ....

60. ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

2011 ஆம் ஆண்டு ஹெம்மாதகம பிரதேசத்தில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக ஹெம்மாதகம பிரதேசத்தில் இயங்கும் ஐடியல் சிறுவர் கவுன்ஸில் அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தது. ஐடியல் சிறுவர் கவுன்ஸில் சிறுவர்களின் பிரச்சினைகளை எதிர்கொண்டு சரியான முறையில் அவர்களுக்கு வழிகாட்ட இயங்கும் ஒரு சமூக சேவை நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Trend

Local:
Single copy: LKR 100.00/-
Annual Subscription: LKR 1400.00/-
6 Months Subscription: LKR 700.00/-

International:
India, Pakistan, Maldives, Singapore: LKR 2000.00
Middle East: LKR 2,200.00
England, New Zealand, Australia, Malaysia, Japan, Korea: LKR 2,400.00
United States: LKR 2,700.00

Contact Hilal at +94 777 849 169

Every month at your doorstep ...

with an assortment of fascinating stuff for the youth, the family, women and children. Presenting ideas & views and interpreting events and developments from a moderately balanced perspective.

#77, Demetagoda Road, Colombo-00900, Sri Lanka.
trendsmonthly@gmail.com | Tel: +94 777 849 169 | +94 11 2689324 | Fax: 2686030
www.facebook.com/thetrendjmf

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org